விசேஷ விளம்பரத்திற்கு!

# இந்துசாதனம்

விசேஷ விளம்பரத்திற்கு!

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் தேதி ஆரம்பமானது.

[புத்தகம் ருக] யாழ்ப்பாணம்:— விஷு ௵ தை மீ ௨௦ உ (1942 பிப்ரவரி 2 திங்கட்கிழமை) [இலக்கம் அ0]

## ஜனங்களின் யுத்த காலப் பொறுப்பு

### பிரிட்டன் இசைந்தால் மக்களின் பெருந் தியாகம்

### இல்லையேல் ஜனப்பாதுகாப்பு வேலை

### ஸ்ரீஜத். இராஜகோபாலாச்சாரியார் சொற்பொழிவு

சென்னை, ஜனவரி, 24

"இந்தியாவின் பாதுகாப்பும் நெருக்கடியும்" என்ற விஷயமாக ராஜாஜி நேற்று மாலை கோகலே ஹாலில் பேசும்போது இந்தியமக்களின் யுத்தகாலப் பொறுப்பு எத்தன்மையது என்பதை விளக்கினார்.

**இணங்கினால்...**

இந்தியாவின் கோரிக்கைக்குப் பிரிட்டன் இசைந்தால் ஜனங்கள் மகத்தான தியாகத்தைச் செய்ய முன்வருவார்களென்பதை அவர் சுட்டிக்காட்டினார். விசை பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருக்கிறதென்றும், இந்தியாவிலுள்ள 30 கோடிமக்களின் ஹிருதய விளக்குகள் ஒளி வீசுமா அல்லவா என்பது பிரிட்டிஷார் என்ன செய்வார்களென்பதைப் பொறுத்திருக்கிறதென்றும் ஸி. ஆர். கூறினார்.

**இணங்காவிடில்...**

தேசியக் கோரிக்கைக்கு "பிரிட்டிஷ் அரசாங்கம் இணங்காவிட்டாலும் ஜனங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு இந்தியருக்கு இருக்கிறதென்றும் ஆகவே கிராமங்களிற் கொள்ளை முதலியன நிகழாதபடி பார்த்துக்கொள்ளுவதற்கும், பொருள் பஞ்சம் ஏற்படாதிருக்கும்படி செய்வதற்கும் மக்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கூறினார். இக் காரியங்களைக் கவனிப்பதற்காக உதவும் முறையில் கிராமங்களில் ஜனங்கள் தாங்களாக ஒருவித அரசாங்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் ஸி. ஆர். தெரிவித்தார்.

கோகலே ஹால் 5 மணிக்கெல்லாம் நிரம்பிவிட்டது. முதல் மாடியிலும் மேல் மாடியிலும் ஜனங்கள் ஏராளமாகச் சேர்ந்து இடித்துக்கொண்டு சிரமப்பட்டு நின்றார்கள். எள் விழ இடமில்லாமல் போகவே ஐந்தே கால் மணிக்கு ஹாலின் கதவுகள் மூடப்பட்டன. அதற்குப் பிறகு வந்தவர்கள் உள்ளே செல்ல அநுமதியின்றி ஏமாற்றத்துடன் வீடுதிரும்பினார்கள். ராஜாஜியும் ஸ்ரீ ஸத்யமூர்த்தியுமே உள்ளே வருவது கஷ்டமாகப் போய்விட்டது.

காது செவிடு படும்படியான கரகோஷத்துக்கிடையில் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் மேடை மீது வந்தார். அநேக வக்கீல்கள் எம். எல். ஏ க்கள் சாதாரண மக்கள் மாணவர்கள் முதலிய பலதரப்பட்ட ஜனங்கள் நேற்றைய கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

ஸ்ரீமான் சிவஞான கிராமணியார் பிரேரிக்கப்பட்டு ஸ்ரீமான் எஸ். ஸத்தியமூர்த்தி தலைமை வகித்தார்.

**ஸி. ஆர். பிரசங்கம்**

**விஷயம் எப்படிப்பட்டது**

ஸ்ரீமான் ஸி. இராஜகோபாலாச்சாரியார் பிறகு பேசியதாவது:-

"இந்தியாவின் நெருக்கடியும் பாதுகாப்பும்" என்பதுபற்றி நான் இன்று பேசப்போவதாகப் பத்திரிகையில் போட்டிருக்கிறார்கள். பாதுகாப்பு நெருக்கடி - இந்த வார்த்தைகளின் சேர்க்கை இந்தச்சமயத்தில் அர்த்த புஷ்டி நிறைந்தது. இரு வார்த்தைகளுக்குமுள்ள சம்பந்தமும் அதிகம். இந்த விஷயத்தைப் பற்றித்தான் நேற்று முன்தினம் கிறிஸ்தவ கலாசாலையில் பேசினேன். அது மாணவர்களுக்காக செய்யப்பட்ட பிரசங்கம். ஆகவே பேச்சில் உஷ்ணத்தைக் காட்டாமலும் உணர்ச்சிகளை மீறவிடாமலும் உபாத்தியாயர் பேசவேண்டிய முறையில் அன்று பேசினேன். இது அப்பேர்ப்பட்ட கூட்டமல்ல. அரசியல் பிரசாரக் கூட்டம். இன்றைய பேச்சில் உஷ்ணமும் உணர்ச்சியும் நிறைந்திருக்குமென்று நீங்கள் எதிர் பார்ப்பீர்கள். அவ்விதம் நான் பேசாமல் சாதாரணமாக உள்ளதை உள்ளபடி எடுத்துச் சொன்னால் மனதில் சிறிது கொதிப்பு ஏற்படாதிருக்காது. விஷயம் அப்படிப்பட்டது. இம்மாதிரி விஷயத்தைப்பற்றிப் பேசும்போது அதுவும் எதிர்ப்பக்கத்தைச் சேர்ந்தவர் நியாயமாக நடந்துகொள்ளாதபோது உஷ்ணத்தைக் கிளப்ப நாம் தனி முயற்சி செய்ய வேண்டியதில்லை. இயற்கையாகக் கிளம்பக்கூடிய உஷ்ணத்தைத் தணிப்பதற்கு ஒரு ரேடியேட்டர்தான் நமக்கு வேண்டியது (சிரிப்பு) ஆனால் கூடியவரை உஷ்ணத்தை அடக்கியே பேச முயலுகிறேன். உஷ்ணமின்றியும் உணர்ச்சி மிகுதியின்றியும் ஸத்தியத்தை நாடுவதுதான் சிறந்தமுறை.

**நமது நிலைமை**

இந்தியாவின் பாதுகாப்பு இன்று தர்க்கத்துக்கான விஷயமல்ல எதிரிகள் வாசலில் வந்துவிட்டார்கள். கதவுக்கருகில் அவர்கள் குரல் கேட்கிறது. இந்தியாவின் பாதுகாப்பு இன்று மிகத் தீவிரமான பிரச்னையாகிவிட்டது. பாதுகாப்புப் பிரச்னையைப்பற்றி என்னைப் போன்றவர்கள் இதைப்போன்ற கூட்டங்களில் பல்முறை பேசியிருக்கிறார்கள். அப்பொழுது விவாதித்த விஷயங்கள் வேறு. இந்தியாவின் பாதுகாப்புக்கு என்ன செலவாகிறது. அரசாங்கத்தின் மொத்த வரிவருவாய் எவ்வளவு என்ற விஷயங்களைப் பற்றியெல்லாம் பேசினோம். பாதுகாப்புத்துறையில் பிரிட்டிஷ் அரசாங்கம் செய்துள்ள தவறுகளைப் பற்றி வற்புறுத்தி வந்தோம். அப்பொழுதெல்லாம் வாதத்துக்காகப் பேசினோம். இப்பொழுது அம்மாதிரிப் பேச்சுக்கு இடமில்லை. இன்று நமது நிலைமையே வேறு. பசியுடன் குழந்தைகள் வீட்டுக்கு வரும்போது தாயாரும் தகப்பனாரும் சட்டியில் ஒன்றுமில்லையென்று சொன்னால் குழந்தைகளின் மனோநிலை எப்படியிருக்கும்? அந்த நிலையில்தான் நாமும் இன்றிருக்கின்றோம்.

**கண் முன்னால் —**

நமது கண்களுக்கு முன்னால், பல விஷயங்கள் தோன்றுகின்றன. நகரங்களிலிருந்து ஜனங்கள் வருவதைப் பார்க்கிறோம். அவர்கள் தாங்கள் பட்ட கஷ்டத்தைப்பற்றிச் சொல்லும் சோகம் ததும்பும் கதைகளைக் கேட்கிறோம், சாவையும் அழிவையும் அவர்கள் கண்ணால் கண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்லும் விஷயங்கள் ஒருபுறமிருக்கப் பத்திரிகைகளில் பல விஷயங்களை வாசிக்கிறோம். ரேடியோவில் செய்திகளைக் கேட்கிறோம். இவை எதுவும் அதிக நம்பிக்கையூட்டத் தக்கவையாயில்லை. ஆங்கில பாஷையில் சில பதப் பிரயோகங்களுக்குச் சில அர்த்த விசேஷங்களுண்டு. "அதிக நம்பிக்கையூட்டத் தக்கதாயில்லை" என்று ஆங்கிலத்திற் சொன்னால் 'அதிக அவநம்பிக்கையூட்டத் தக்கதாயிருக்கிறது' என்று அர்த்தம்.

**அச்சம் விளைவிக்க இஷ்டமில்லை**

ஆகவே, நிலைமை மோசமாயிருக்கிறது. அச்சம் விளைவிக்க நான் இஷ்டப்படவில்லை. யாருக்கு நான் அச்சம் விளைவிப்பது? என்னுடைய ஜனங்களுக்கா? ஒருநாளும் அந்த உத்தேசமில்லை. அபாயத்திலுண்டாகும் கஷ்டத்தைவிட அச்சத்தால் ஜனங்களுக்கு அதிக கஷ்டமேற்படும். யாரும் ஜனங்களுக்கு அச்சம் விளைவிக்கக் கூடாதென்பது எனது அபிப்பிராயம். யோக்கிய பொறுப்புடனும் உண்மையாகவும் இதைச் சொல்லுகிறேன். ஆகவே அத்தகைய ஒரு குற்றத்தை நானே செய்வேனா? அச்சம் விளைவிக்க வேண்டுமென்பது எனது எண்ணமில்லை. ஆனால் குறைந்தபக்ஷம் எதைச் சொல்லவேண்டுமோ அதை ஜனங்களுக்குச் சொல்லித்தானாக வேண்டும்.

**கர்ட்டின் சொன்னதென்ன?**

ஆஸ்திரேலியாவின் பிரதமமந்திரி பகிரங்கமாகவும் பூரணபொறுப்புடனும் என்ன சொல்கிறார்? நிலைமை திருப்திகரமாயில்லையென்று சொல்கிறார். "பஸிபிக் யுத்த விவகாரங்களை நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம். பிரிட்டனைமட்டும் நீங்கள் காப்பாற்றிக்கொண்டால் போதுமா? ஆஸ்திரேலியாவின் கதி என்ன?" என்று மிஸ்டர் கர்ட்டின் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு சண்டை போடுகிறார். பிரிட்டன் உதவாவிட்டால் தாம் அமெரிக்காவிடம் நேர்முகமாகப் பேசிக்கொள்வதாயும் சொல்லுகிறார். அவர் நிலைமையைச் சரிவர அறியாதவரென்று சொல்ல முடியுமா? அவர் என்ன ஸம்பந்தமற்ற மனிதரோ? அல்லது பொறுப்பு வாய்ந்தவரல்லவா? ஆகவே, மிஸ்டர் கர்ட்டின் பேச்சைக் கேட்கும்போது, இந்தியாவிலுள்ள பொறுப்பு வாய்ந்த மனிதர்கள் மனசில் சந்தேகம் எழுகிறது. ஆஸ்திரேலியாவுக்கு ஏற்படக் கூடியது இந்தியாவுக்கும் ஏற்படலாமல்லவா? பிரிட்டன் ஆஸ்திரேலியாவுக்கு உதவ முடியவில்லையென்றால் இந்தியாவுக்கு மட்டும் உதவப் போகிறார்களா என்ன என்ற யோசனைகளும் கிளம்புகின்றன. (சிரிப்பு)

**'சிரிப்புக்குச் சமயமில்லை**

ஏன் சிரிக்கிறீர்கள்? சிரிப்புக்குக் காலதேச வர்த்தமானங்கள் உண்டு. விளையாட்டுக்கு இது சமயமல்ல. இந்தச் சமயத்தில் பாதுகாப்பற்ற தேசத்தில் வசிப்பது விளையாட்டல்ல. சொந்த நாட்டில் யுத்தம் நேரிடுமென்றால் உயிர்ச்சேதம் சொத்து அழிவு இவை சித்திக்கும். ஆகவே சிரிப்பதால் பயனில்லை. எந்த விஷயத்தையும் சிரித்துக் கொண்டே சகிப்பதென்பது நல்ல வேதாந்தந்தான். 50 வருஷங்களுக்குப் பின்னால் நடைபெறப்போவது இன்றே நடந்து விடுகிறதென்ற சித்தாந்தம் நல்லதுதான். அதைவேதாந்தத்தை நீங்கள் அறிந்து கொண்டிருந்தால் சிரிப்பது சரிதான். ஆனால், உயிரில் உங்களுக்கு ஆசையாயிருந்தால் சொத்துச் சுதந்திரங்களை இழக்க அனேக

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## தேயிலை ஸ்டோரில் தீ விபத்து

சென்ற செவ்வாய்க்கிழமையன்று இரவு 10-45 மணியளவில், யூனியன் பிளேஸ் கொலோனியல் மோட்டார்க் கம்பெனியை யடுத்துள்ள தேயிலை ஸ்டோர் ஒன்றில் தீவிபத்து ஏற்பட்டது. சுலைமான் என்னும் ஒருவருக்குச் சொந்தமான குறித்த ஸ்டோரின் கதவு திறப்பற்றவே, கூரையின் கீழ்ப்புறத்துள்ள பலகைகள் எரிய ஆரம்பித்ததெனத் தெரிகிறது.

தீயணைக்கும் படையதிகாரி திரு. பி. ஈ. வீரசிங்கவும் மற்றும் 9பேர்களும் ஸ்தலத்திற்குச் சென்று 45 நிமிஷநேரத்தில் தீயணைத்து விட்டனர். தோட்டத்திற்கனுப்புவதற்கென்று தயாராக வைக்கப்பட்டிருந்த சில அரிசிமூடைகள் மாத்திரம் தீக்கிரையாயின.

## பூச்செடிகளுக்குப் பதிலாக உணவுப் பயிர்

### விவசாய மந்திரியின் புதிய திட்டம்

### உணவு உற்பத்திக்கு 5 லக்ஷம் ரூ. உபமான்யம்

கறுவாக்காட்டுப் பகுதியிலுள்ள வங்களாக்களைச் சுற்றிலும் இப்போதுள்ள பூச்செடிகளை எடுத்துவிட்டு, அவைகளுக்குப் பதிலாக உணவுப்பயிர்கள் பயிரிடப்படும். இவ்வித தோட்டப் பகுதிகளை உணவு உற்பத்திக்கு உபயோகித்துக் கொள்வதற்கான ஒரு திட்டத்தை நடைக்குக் கொண்டுவர விவசாய மந்திரி உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

இவ்விஷயத்திற் கொழும்பு நகரசபையுங் கலந்தாலோசிக்கப்பட்டு அதன் உதவியோடு இத்திட்டம் நடத்தப்படும். கறுவாக் காட்டுப் பகுதியிலும் கொழும்பு நகரசபை எல்லைக்குட்பட்ட ஏனைய வாசஸ்தலப் பகுதிகளிலும் உள்ள பங்களாத் தோட்டங்கள் யாவற்றிலும் உணவு உற்பத்திக்கு ஏராளமான இடம் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. இதற்கான திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

காய்கறிகளோடு அரிசிக்குப் பதிலான பயிர்களையும் பயிரிடும்படி வற்புறுத்தவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

அரிசிக்குப்பதிலாகப் பிரதானமாகக் கிழங்குகளையும் ஏனைய உணவுப் பொருள்களையும் உற்பத்திசெய்வதில் விசேஷ முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமென்று அறியப்படுகிறது.

வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு விதைகளும் பயிரிடுவதற்கான சாதனங்களும் வாங்கினவிலைக்கு வழங்கப்படும். கொழும்பில் பயிர்களை உற்பத்திசெய்வதற்குச் சௌகரியமேயுள்ள வாசஸ்தலங்களில் வசிப்பவர்களுக்கு விதைகளும் பயிரிடுவதற்கான சாதனங்களும் இனாமாகவே வழங்கப்படும்.

அதிகசத்துள்ளதும் ஆரோக்கியத்திற்கு உகந்ததுமான ஒருவகைக் கிழங்குகளை அதிகமாகச் சனங்கள் உபயோகிக்கும்படி செய்ய விவசாயப்பகுதி முயற்சித்து வருகிறது.

**5 லக்ஷம் ரூபா உபமான்யம்**

இப்போதைய நெருக்கடியான நிலைமையில் உணவு உற்பத்திக்கு ஊக்கமளிப்பதற்காகவும் உணவு உற்பத்தியாளர்க்கு கஷ்டமேற்படாமல் பாதுகாப்பதற்காகவும் இலங்கை முழுவதுமுள்ள பகுதிகளில் தேவைக்கதிகமான உற்பத்தியை அரசாங்கத்தார் வாங்கவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. விவசாய நிருவாகசபையின் நேற்றைய கூட்டத்தில் இதற்கான ஆலோசனை கூறப்பட்டதாக அறியப்படுகிறது.

மேற்படி உற்பத்திசெய்பவர்களிடமிருந்தும் தோட்டச் சொந்தக்காரர்களிடமிருந்தும் இவ்வாறு அதிக உற்பத்தியை அரசாங்கத்தார் விலைக்கு வாங்கிக் கொள்ளுவார்கள்.

நிருவாகசபையின் நேற்றைய கூட்டத்தில் நெருக்கடி காரணமாக உணவு உற்பத்திக்கு ஊக்கமளிக்க விவசாய டைரெக்டர் கோரியிருந்த ரூபா 5,00,000 உபமான்யம் நிர்வாகசபையால் சிபார்சு செய்யப்பட்டது.

## இராஜாஜி-ஜின்னா சந்திப்பு

### சமரசத்துக்கு ஏற்பாடு

பிருத்தானிய அரசாங்கத்துக்கு ஏகோபித்த கோரிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்பாக முஸ்லிம் லீகுடன் சமாதானஞ் செய்துகொள்வதற்காக ராஜாஜி, ஜனாப் ஜின்னாவைச் சந்திக்கலாமென்று "பம்பாய்க் குரானிகல்" பத்திரிகையின் அலகாபாத் நிருபர் அறிவிக்கிறார். காந்திஜியும் ஜனாப் ஜின்னாவைச் சந்திக்கலாம்.

## அரிசி ஏற்றிச் செல்லும் புகைரதங்கள்

### ஆங்காங்கே தடைபட்டு நிற்கின்றனவாம்

### கண்டியில் அரிசிக்குப் பழையவிலை

கொழும்பிலிருந்து புகைரதமூலம் அனுப்பப்பட்ட அரிசியில் ஏறக்குறைய 150 வண்டி நிறைய அரிசி மூடைகள் போய்ச் சேரவேண்டிய இடங்களுக்குப் போகாமலோ அல்லது வண்டிகளிலிருந்து இறக்கப்படாமலோ ஆங்காங்கே புகைரத நிலையங்களில் தடைபட்டு நிற்பதாக அறிவிக்கப்படுகிறது. சில இடங்களில் அரிசியை வைத்திருப்பதற்கு இடவசதி இல்லாத காரணத்தாலும் புகைரதங்களிலிருந்து அரிசி இறக்கப்படாமலிருக்கின்றன.

வேறு சில இடங்களில் பத்து அல்லது 20 வண்டி நிறைய அரிசி மூடைகள் ஏறக்குறைய 2 வாரங்கள் வரை இறக்கப்படாமலிருக்கின்றன. ஏனெனில், புகைரதச் சாமான் கொட்டிலில் அரிசிக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடம் ஏற்கனவே நிரம்பிப் போய்விட்டது.

ஏராளமான புகைரத வண்டிகள் இவ்வாறு ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருப்பதால் ஏற்பட்டுள்ள கஷ்டத்தைப் பற்றி புகைரத அதிகாரிகள் உணவுப்பொருட் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் விண்ணப்பித்துக் கொண்டிருக்கின்றனர். இருந்தாலும் அரிசியைக் கொண்டு போவது மிகவும் அத்தியாவசியமான வேலையாதலின் கொழும்பு அரிசிக் குதங்களுக்கு மேலும் புகைரதங்கள் அனுப்பப்படுகின்றன.

புகைரதங்கள் ஆங்காங்கே தடைபட்டு நிற்பதால் புகைரதங்களில் வேறு சாமானங்கள் போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்பட்டிருக்கின்றது. பொதுசனங்கள் அனுப்பும் சாமான்களின் தன்மையையும் அவசரத்தையும் பொறுத்து வரிசைக் கிரமமாக வசதிசெய்து கொடுக்கப் புகைரத அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தாலும் வண்டிகள் கிடைப்பதிற் காலதாமதம் ஏற்படுகிறது.

**கண்டியில் அரிசிக்குப் பழையவிலை**

கண்டி ஜன 26

கண்டியிலுள்ள அரிசி வியாபாரிகள் இன்று காலை தங்களுடைய அரிசிக்கடைகளை மூடிவிட்டு உதவி மாகாணத் தலைவர் மிஸ்டர். ஜே. டப்ளியூ. எச். ஓ. ரீகனிடம் தூது சென்று தங்கள் குறைகளைத் தெரிவித்துக் கொண்டனர். அதாவது, தங்களிடமுள்ள அரிசி பழைய விலைக்கு வாங்கப்பட்டமையால், புதிய கஸெற் விலைக்கு விற்பதில் தங்களுக்கு நஷ்டமுண்டாகுமென்று அவர்கள் முறையிட்டுக் கொண்டனர்.

மிஸ்டர். ஓ. ரீகன் உடனே உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியோடு டெலிபோனில் ஏற்பாடு செய்து கொண்டபின், அடுத்த உத்தரவுவரை, பழைய விலைக்கே அரிசி விற்கலாமென்று வியாபாரிகளுக்கு அனுமதியளித்தார். வியாபாரிகள் உடனே கடைகளைத் திறக்க வேண்டுமென்றும் அவர் உத்தரவிட்டார்.

பின், நகரசபையின் கடைகள் இன்றுகாலை திறக்கப்பட்டுப் புதிய கஸெற் விலைக்கே அங்கு அரிசி விற்பனை செய்யப்பட்டது.

பிற்பகலில் கச்சேரியில் ஒரு மகாநாடு நடைபெற்றது. இம்மகாநாட்டில் கண்டி மாகாணத் தலைவரும், பகுதி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியுமான மிஸ்டர். இ. டி. டைஸன், மிஸ்டர். ஓ'ரீகன், மேயர் [illegible], நகரசபைக் கொம்மிஷனர் மிஸ்டர். டபிள்யூ. கோபாலவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதன்பிறகு வியாழக்கிழமை வரையிலுந்தான் வியாபாரிகள்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## சங்கத் தமிழ்

எம். கதிரேசச் செட்டியார்

சங்கத்தமிழின் மொழி நடைகள் தூய்மையும் இனிமையும் வாய்ந்து பொருளாழமுடையனவாய் உற்றுணர்ந்து பயில்வார்க்குப் பெரிதும் இன்பம் பயப்பனவாகும். சங்கப் புலவர் வருணனை மரபும், மொழி வளமும் பொருளாழமும் ஆகிய இவற்றைப் பிற்காலத்துப் புலவர்கள் மேற்கொண்டனராயினும், அத்துணைத் திட்பம் அமைதல் அவர்க்கு அரிதாயிற்று. ஆயினும் சங்கத்துச் சான்றோர் சென்ற வழியே பிற்காலத்துப் புலவர்கள் செல்லுதற்குரிய நன்னெறியாக அமைந்தது என்பதில் தட்டின்று. சங்கத் தமிழ் நூல்களுள் ஒன்றாகிய கற்றறிந்தாரேத்துங் கலித்தொகையில் மகளிர் நீர்விளையாட்டு வருணனையில் "ஒருத்தி, படிதாழ் கலிங்கம் தழீஇ ஒருகை, முடிதாழ் இருங் கூந்தல் பற்றிப் பூவேய்ந்த, கடிகயம் பாயுமலந்து" என்று கூறப்பட்டுள்ளது. இதன்பொருள், ஒரு பெண் தன் அடியிலே தாழ்ந்த ஆடை நழுவி விடாமல் ஒரு கையாலே பற்றிக் கொண்டு மற்றொரு கையாலே முடியினின்றுங் குலைந்து வீழ்ந்த கரிய கூந்தலைப் பிடித்துக் கொண்டு மலர் நிறைந்த குளத்திலே பாய்வாள் என்பது. நீர் பாயுங்கால் காலுக்குத் தடை நேராமலும், அவிழ்ந்து விழாமலுமிருக்க, ஆடையை ஒரு கையாலே பிடித்துக் கொண்டாளெனவும், தன் நீண்ட கூந்தல் சரிந்து வீழ்ந்தால் அதுவுந் தன் பாய்ச்சலுக்கு இடையூறுமெனக் கண்டு மற்றொரு கையால் அதனையும் பிடித்துக் கொண்டாளெனவும் கூறிய இந்நிகழ்ச்சிகள் இயற்கைக்குப் பொருத்தமானவைகளே. இக்கருத்தையே பிற்காலத்துத் தஞ்சைவாணன் கோவை நூலாசிரியர் 'துகிலேந்து கூந்தலொரு கையிலேந்தி யசைந்தொருகை, துகிலேந்தி' என்று தன்னை விட்டுப் பெயர்ந்து செல்லும் தலைவியின் செலவைக் குறித்துத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியதாகக் கூறினர். இங்கே கூந்தல் முடியாமை, துகில் உடாமை, ஆகிய இந்நிகழ்ச்சிகளுக்குக் காரணமாகக் குறித்தது களவொழுக்கம் வெளிப்படுமென்று கருதியதேயாம். இதனையே அக்கோவை யுரையாசிரியர் "கூந்தல் முடியாமலும் துகில் உடாமலும் வந்தது என்னையெனின் ஆயக் கூட்டத்தார் வருவரென்றும் வந்தால் களவு புலனாமென்றுங் கருதி அவ்விடத்து நீங்கிக் குழல்முடிக்கவும் துகில் உடுக்கவும் நினைத்து வந்தாளென்க"—என்று கருத்துக் கூறினர். இங்கே நினைக்கத் தக்கது ஒன்று. நீர் விளையாட்டுக்குச் சங்கத் தமிழ் கூறியது பொருத்தமாகும். தலைவி தலைவனிடத்தினின்றும் பிரிந்து வருங்கால், களவு புலனாகுமென்று கருதி வேறோரிடத்தில் வந்து முடிக்கவும் உடுக்கவும் நினைத்தாள் என்று கூறியது ஒருவாறு பொருந்தும். மேலும், கூந்தல் அவிழ்ந்த நிலையிலும் ஆடை நெகிழ்ந்த நிலையிலும், ஒரு பெண் ஒரு தனியிடத்தினின்றும் விரைந்து செல்வாளேயானால் அச்செலவே அவள் களவைப் புலப்படுத்தவுங் கூடும். இங்ஙனம் அலங்கோலமான நிலையில் இவள் வருவதற்குக் காரணம் என்னென்று தோழிமார் ஆராய்வாராயின் காலமும் இடமும் அவளையாகக் களவு புலனாகுமன்றோ?

* * *

இனி, சங்கத்தமிழில், சில குணஞ் செயல்களுக்கு வரையறையான இலக்கணங்களைக் காணலாம். தொல்காப்பியத்து வரையறுக்கப்பட்ட குணஞ் செயல்களின் இலக்கணங்கள் பிற்காலத்துப் புலவர்களுக்குப் பெரிதும் ஆதாரங்களாயின. அவற்றுள் கலிப்பாட்டிற் கூறப்பட்டன சில,

ஆற்றுதலென்ப தொன்றலந் தவர்க்குதவுதல்
போற்றுதலென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப்படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப்படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப்படுவது பேதையார் சொன்னோன்றல்
செறிவெனப்படுவது கூறியது மறாஅமை
நிறையெனப்படுவது மறைபிறரறியாமை
முறையெனப்படுவது கண்ணோடா துயிர்வெளவல்
பொறையெனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்

இவற்றுள், ஆற்றுதல் என்பது இல்வாழ்க்கை நடாத்தல், அதன் சிறந்த குறிக்கோள் இல்லார்க்கு உதவுதலாகும். இவ்வுண்மையையே சிலப்பதிகார நூலாசிரியர் கண்ணகி கூற்றாக, "அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலுந் தொல்லோர்ச் சிறப்பின், விருந்தெதிர் கோடலும் இழந்தவென்னை" என்று கூறினர். இங்கே கண்ணகி தன் கணவனைப் பிரிந்த நிலையில் இல்வாழ்க்கைப் பயனாகப் பிறர் எண்ணும் இன்பத்தின் இழப்பைக் குறித்து வருந்தினாள் அல்லள். பின்னைக் கணவனுடன் கூடி வாழ்தலின் முக்கிய நோக்கமாகிய அறவோர்க்களித்தல், முதலியன செய்ய இயலாமை பற்றியே வருந்தினளாம். இக்குறிக்கோளே சிறந்ததென்பது கருதப்பட்டது. இது கருதியே பரிமேலழகர் "தானம், பெரும்பாலும் இல்லறத்தின் மேனின்றது" என்றார். "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்" என்னும் இது மிகச் சிறந்த குணவிலக்கணமாகும். பண்பெனுஞ் சொல் பொதுவகையாகக் குணமென்னும் பொருளினதாகும். ஆயினும் பெருமை முதலிய பல குணங்களையும் அதிகார முறையில் வைத்துப் பாடிய வள்ளுவர், பின்னும் ஓர் அதிகாரத்துக்குப் பண்புடைமையென்று பெயரிட்டனர். ஆகவே குணவகை பல கற்றும் பண்பென்பது சிறப்பு முறையில் வைத்து ஆராயத்தக்கதென்பது அவர் கருத்து. சிறந்த உரையாளராகிய பரிமேலழகர் இக்கலிப்பாடல் பகுதியை நன்றாகப் பயின்றவராதலின், பண்புடைமையென்பது "பெருமை, சான்றாண்மை முதலிய நற்குணங்களானும் வழுவாது நின்றே, எல்லாரியல்புகளும் அறிந்தொழுகுதல் பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல் என்றார் பிறரும்" என்று விளக்கியுள்ளார். இக்கலிப்பாடல் பகுதியைப் படித்திலரேல் இப்பொருள் தோடலரிதாம். இங்ஙனமே ஏனையவற்றையும் நோக்கி யுணர்தல் வேண்டும். குறுந்தொகையென்னும் நூல் அடிவரையாற் குறுகிச் சொற்கள் செறிக்கப்பட்டுப் பொருள்நலம் சிறந்ததொன்று. ஒரு தலைவனை நோக்கித் தோழி தலைவியின் ஊர், மிக அணிமையில் இதோதோன்றுகிறதென்று குறிப்பிடுமுகமாக, "இதுக்கான... நிலவும் இருளும் போலப், புலவுத் திரைக்கடலும் கானலுந் தோன்றும், மடலம் பெண்ணை எஞ்சிறு நல்லூரே." என்று கூறப்பட்டுள்ளது. தன்னூரை காட்டப்புக்குத் தோழி தலைவன் காண்டற்கு அடையாளமாக அலைநுரைப் பெருக்கால் வெண்ணிறமாகக் காணப்படும் கடலையும் மாஞ்செடிகளின் நெருக்கத்தால் இருண்டு தோன்றும் கடற்கரைச் சோலையையும் காட்டி அதனையடுத்து மடல்கள் செறிந்த பனைமரங்களையுங் காட்டி அவற்றையடுத்துள்ளது தன்னூர் என்றனளாம். ஒருவர் ஒரு பொருளைக் காணுங்கால் நெடுந்தூரத்தில் பெரும் பொருளையும், அணுக அணுகச் சிறு பொருள்களையும் காண்டல் இயல்பு. அச்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழக தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு ஞு தைமீ ௨0 வ திங்கட்கிழமை

## சஞ்சலமுற்ற சமயம்

இப்பொழுது நடக்கும் யுத்தம் விசேஷமாகக் கிழக்குப் பகுதியிற் பெரும் மனச்சஞ்சலத்தைத் தருகின்றது. ஆபிரிக்காவிலே பிரதான தானமாகிய பென்காசியைப் பகைவர் திருப்பிப் பிடித்துவிட்டதாகச் சமாசாரம் பிறந்திருக்கிறது. இந்தப் பிரதான தானம் 12 மாசங்களுள் நான்கு முறை பகைவராலும் பிருத்தானியராலும் மாறிமாறிப் பிடிக்கப்படலாயிற்று. சென்ற பிவர்வரி மாசத்தில் பென்காசி எங்கள் பிருத்தானியராற் பிடிக்கப்பட்டது. ஆனால், இரண்டு மாசஞ் செல்வதற்கிடையில் ஜர்மனியரும் இத்தலியருஞ் சேர்ந்து மீட்டுப் பிடித்தனர். பின்னர் சென்ற டிசெம்பர் மாசம் பிருத்தானியர் பென்காசியைப் பகைவரிடமிருந்து மீட்டுப் பிடித்தனர். ஆனால் அடுத்த மாசமாகிய ஜனவரி முடிவதற்கு முந்தியே பகைவர் பென்காசியை மீட்டுப் பிடித்துவிட்டனரென அறியக்கிடக்கின்றது. பென்காசி யுத்தம் கவறுடுதல் போல் வெல்வதும் தோற்பதுமாக மாறி மாறி நிகழ்கின்றது. அதனை, மீட்டும் பிருத்தானியர் கைப்பற்றுவதற்கு அதிக காலஞ் செல்லாதென எண்ணி நாம் திருப்திப்படுகின்றோம்.

இனிக் கிழக்கு யுத்தமுனை விஷயமாகச் சொல்லுமிடத்தில் மலாய்நாட்டில் யுத்தம் முடிந்துவிட்டதென்றும் சிங்கப்பூர் யுத்தம் இப்பொழுது ஆரம்பித்துவிட்டதென்றும் சித்திவந்த சமாசாரத்தால் அறியலாகும். சிங்கப்பூருக்கும் யோகூருக்குமிடையேயுள்ள நீண்ட பாலம் உடைக்கப்படலாயிற்று. தென் யோகூரில் நின்ற பிருத்தானிய சைநியத்தை அதிகாரிகள் சிங்கப்பூருக்குக் கூப்பிட்டுவிட்டார்கள்; சிங்கப்பூரில் இப்பொழுது யுத்தம் நடக்கின்றதென அறிகின்றோம். மலாய் நாட்டை இழந்துபோனமைக்குக் காரணம், பகைவரிடத்துள்ள ஆகாயப்படையின் மிகுதியும் கடலிலே அவர்களது கப்பல்கள் கண்டபடி உலாவித் திரிதலும் என்று சொல்லப்படுகின்றது. இரண்டு மாசகாலமாக மலாய்நாட்டில் பிருத்தானிய சக்கராதிபத்தியப் படை உயிரை உயிர் பாராமல் திறமையோடு நின்று யுத்தஞ் செய்திருக்கிறது. நாட்டை இழக்கவேண்டி வந்தாலும் பிருத்தானியபடை பகைவர்களுட் பலரைக் கொன்று, யுத்த உபகரணங்கள் பலவற்றைச் சிதைத்துப் பெரும் நஷ்டம் செய்திருக்கின்றது. மலாய் நாட்டிலுள்ள பிருத்தானிய சக்கராதிபத்தியப் படைக்கு உற்ற சமயத்திலே உதவியாமை ஒரு பெருங் குறைதான். ஆனால், மலாய்நாட்டைக் கைப்பற்றிய அவ்வளவு இலகுவாகச் சிங்கப்பூரைப் பகைவர் கைப்பற்றிவிடலாமென்று நினைத்தால் அது வீண் எண்ணமாகும். மலாய்நாட்டிலல்ல, கிழக்குச் சக்கராதிபத்தியத்திலே அரண் செய்யப்பட்ட சிறந்த தானங்களுட் சிங்கப்பூர் ஒன்றுகுமென்பது உலகப் பிரசித்தம். இதற்கிடையில் ஆரததிலிருந்து படைத்துணையும் வந்து சேருமாதலால் பிருத்தானியர் இந்த யுத்தத்திலே பிரதிகூலமடையமாட்டார்களென்பது திண்ணம். ஆனதனால் பிருத்தானிய பிரசைகளாயுள்ள நாங்கள் இந்த யுத்த விஷயமாகச் சஞ்சலப்படவேண்டாது. நீதி வெல்லும் அநீதி தோல்வியுறுமென்ற உண்மையை இந்நாட்டு மக்கள் நன்கு உணர்ந்துள்ளவர்களாவர்.

---

## 6-ம் வட்டார வாக்காளர் பொதுக்கூட்டம்

(நமதுநிருபர்)

29-1-42

இன்று பிற்பகல் 6 மணியளவில வண்-வீரமாகாளியம்மன் கோவில் முன்றிலிற் பட்டின சங்கத்தின் ஆறும்வட்டார வாக்காளர்களின் பொதுக்கூட்டமொன்று கூடப்பட்டது. அப்போது நியாயதுரந்தரர் மிஸ்றர். C. குமாரசூரியர் அக்கிராசனராகவும் மிஸ்றர். P. W சம்பி மாசா காரியதரிசியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

கூட்டத்தில், யுத்தப் பாதுகாப்பிற்கு என்ன செய்ய வேண்டுமென்றும், பட்டினசபை ஆறும்வட்டார அங்கத்தவர் மிஸ்றர். K ஐயாத்துரை சபையில் நடந்துகொண்ட விதத்தைக் கண்டித்தும் பேசப்பட்டது.

திருவாளர்கள். C. T. நவரத்தினம், A. இளையப்பா, S. S. K. வானராசன், தலைவர் C. குமாரசூரியர் முதலானோர் பேசினர்.

ஆறம்வட்டார அங்கத்தவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

---

## சுவரேறிப் புகையிலை திருடியதாக

### எதிரிக்கு நாலு அடித்தண்டனை

29-1-42

சிறுப்பிட்டியில் வசிக்கும் பன்னிரண்டு வயதுடைய சின்னத்தம்பி-கந்தசாமி அல்லூர்ச் சின்னத்தம்பி-குமாரசாமியின கடைச் சுவரால் ஏறி உட்புகுந்து, புகையிலைகளைக் களவாக எடுத்துச் சென்று அவற்றை விற்பனை செய்ததாகக் குற்றஞ்சாட்டி ஒரு வழக்கு நீதிபதி மிஸ்றர். குவின்டன் பேர்னுண்டோ முன்னிலையிற் றொடரப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டான். நீதிபதி எதிரிக்கு நாலு அடித்தண்டனை விதித்தார்.

---

## சேலையைத் திருடியவனுக்கு இரண்டு மாதம்

பாசையூரில் வசிக்கும் வேலைக்காரனாகிய கந்தையா-முருகேசு அல்லது சின்னத்தம்பி சீதாரிபிலுள்ள டாக்குத்தர் மிஸ்றர். G. S. மேதர் என்பவருக்குரிய ரூபா 125 பெறுமதியான பட்டுச் சேலையையும் கைக்கடிகாரத்தையும் களவாக எடுத்துச் சென்றதாகக் குற்றஞ்சாட்டிய வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் நீதிபதி மிஸ்றர். குவின்டன் பேர்னுண்டோ எதிரிக்கு இரண்டுமாதக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

---

## ஈ. ஏ. பாய் கடைக்காரர் மீது மற்றொரு வழக்கு

### மிளகாயை அதிக விலைக்கு விற்றனராம்

29-1-42

யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள பிரபல வர்த்தகரும் வியாபாரியுமாகிய அலிபாய்-ஆதம்ஜீ (E. A. பாய்கடை) சென்ற 16-1-42-ந் திகதி வண்ணார்பண்ணையிலுள்ள கார் டிறைவர் பூந்தி-பண்டா வென்பவருக்குக் கட்டுப்பாட்டு விலையிலும் கூடுதலாக அரை இறாத்தல் காய்ந்த மிளகாயை அக்கோவுக்கு 10½ சதத்திற்கு விற்க வேண்டியதை 11 சதத்திற்கு விற்றதாகக் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்றர். G. H. E. சிஜயசேகரா ஒரு வழக்கை நீதிபதி மிஸ்றர். குவின்டன் பேர்னுண்டோ முன்னிலையில் தொடர்ந்தார்.

அப்போது பூந்தி-பண்டா சாட்சியம் கூறும்போது குறிப்பிட்டதாவது:—

சென்ற 16-1-42ந் திகதி காலை 10½ மணியளவில் நான் எதிரியுடைய கடைக்குச் சென்று ஒரு இறாத்தல் மல்லியும் 16 சதத்திற்கும் அரை இறாத்தல் காய்ந்த மிளகாய் 11 சதத்திற்கும் வாங்கினேன். நான் சாமான்களை வாங்கிக்கொண்டு எதிரியிடம் ஒரு 50 சத நாணயத்தைக் கொடுத்தேன். எதிரி சாமான்களுக்குரிய காசை எடுத்துக் கொண்டு மிகுதிப்பணத்தையும் பற்றுச்சீட்டையும் கொடுத்தார். நான் சாமான்களை எடுத்துச் சென்று எசமான்வீட்டு வேலைக்காரியிடம் கொடுத்தேன். நான் வாங்கிய சாமான்கள் உடனே தேவைப்படாமையால், அவற்றைத் திருப்பிக்கொடுக்க அடுத்த நாள் எடுத்துச் சென்றேன். போகும்போது சாமான்களைக் காரில் வைத்துச் சென்றேன். காரிற் சில பழுதுகள் பார்க்கப்படவேண்டியிருந்தமையால், காரை அப்புத்துரையின் "காராஜ்ஜிற்கு" கொண்டு சென்றேன். அவ்விடத்தில் கார் நின்றபோது, அப்புத்துரை காருக்குள் இருந்த பார்சலைக் கண்டு அப்பார்சல் என்னவென்று "வடையா" வென்று கேட்டு அதனை எடுத்துப் பார்த்தார். அப்போது அவர் அதில இருந்த பற்றுச்சீட்டை எடுத்துப் பார்த்துவிட்டுக் காய்ந்த மிளகாய்க்குக் கூடுதலாக விலை போடப்பட்டிருப்பதாயும் உடனே இதைப்பற்றி பொலிசாருக்கு அறிவிக்கும்படியும் சொன்னார். நான் பொலிஸ்நிலையம் சென்று அறிவித்தேன். பொலிசாருக்கு எதிரிதான் எனக்குச் சாமான் தந்தாரென்று எதிரியைக் காட்டிக்கொடுத்தேன்.

எதிரிமீது குற்றஞ்சாட்டப்பட்டபோது, எதிரி தான் குற்றவாளியல்லவென்று கூறினர். நீதிபதி எதிரியை 500ரூபா சரீரப் பிணையில் விட்டு வழக்கை மேல் விசாரணைக்காக வருகிற 14-2-42ந் திகதிக்குத் தவணையிட்டார்.

---

## "ஆசியா ரக்ஷகனின் வேஷம்"

கல்கத்தா, ஜன, 27— "ஆசியா ரக்ஷகனின் வேஷம்" என்னும் பொருள்பற்றிச் சீன சேனைபதியான டக்றர். வி. ஜே. பரவோ ஒலிபரப்பிய ஒரு பிரசங்கத்திற் கூறுவதாவது:—

"ஆசியாவின் ரக்ஷகன்" என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ஜப்பானியரின் மிருகத்தனமான விமானத் தாக்குதலாலும் ராக்ஷசத்தனமான தரைச்சண்டையாலும் 50 லக்ஷத்திற்கு அதிகமான சனங்கள் உயிரிழந்தனர். ஏறக்குறைய 2 கோடி சனங்கள் காயமடைந்தனர். கணக்கில்லாத சனங்கள் வீடின்றித் தவிக்கின்றனர். 15 லக்ஷம் குழந்தைகள் பெற்றோரைப் பறிகொடுத்து அநாதர்களாகி விட்டனர்.

---

## பகல்பூர்க் கலவரத்தில் இருவர் மரணம்

பாட்னா, ஜன, 29 நேற்றுமாலை பகல்பூர் நகரில் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தில் இருவர் கொல்லப்பட்டதாகவும் 70 பேர் காயமடைந்ததாகவும் இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

---

## விவாகம்

### மாணிக்க இடைக்காடர்— சிவமங்களம்

நிகழும் 1942-ம் ஆண்டு ஜனவரி மீ 28-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில், திருவளர்செல்வன் கா. மாணிக்க இடைக்காடர் அவர்களுக்கும் கோலாலம்பூர் லக்ஷ்மிவிலாசவைச் சேர்ந்த திரு. K. சினப்பு அவர்களின் புதல்வி திருவளர் செல்வி சிவமங்களத்துக்கும் பதுளையிலுள்ள பண்டாரவளை றோட், 126-ம் இலக்க வீட்டில் விவாகம் மிக்க சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் சகல செல்வமும் பெற்று நீடுவாழ எல்லாமவல்ல இறைவன் திருவருள்பாலிப்பாராக.

### இராமநாதன்— சிவகாமியம்மாள்

அநுராதபுரக்கச்சேரியிற் கடமை பார்க்கும் திருவளர் செல்வன் K. இராமநாதன் அவர்களுக்கும் ஐயனார் கோவிலடியைச்சேர்ந்த டக்றர் S. துரையப்பா அவர்களின் புதல்வி திருவளர் செல்வி சிவகாமியம்மாளுக்கும் நிகழும் 1942-ம ஆண்டு ஜனவரிமீ 28-ந் திகதி புதன்கிழமையன்று இரவு 9 மணியளவில் உள்ள சுபமுகூர்த்தத்தில் மணமகனில்லத்தில் விவாகம் மிக்க சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் சகல செல்வமும் பெற்று இனிதுவாழ எல்லாமவல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

---

# அரசாங்க சபை

## நகர வாசிகளை வேற்றிடத்திற்கு அகற்றிவிடல் வேண்டும்

சென்ற வெள்ளிக்கிழமை இலங்கை அரசாங்கசபை கூடியபோது யுத்தகாலப் பாதுகாப்பை உத்தேசித்துக் கொழும்புநகரத்தில் வசிக்கும் மக்களை வரவிருக்கும் ஆபத்தினின்றும் பாதுகாத்தற்காக மேற்படி நகரப் பிரதேசத்திலிருந்து ஒதுங்கியிருக்கச் செய்வது அவசியமென்ற விஷயமாகப் பேசப்பட்டது.

கொழும்பு மத்தியபகுதிப் பிரதிநிதியாகிய மிஸ்றர் A. E. குணசிங்க இவ்விஷயமாகப் பேசும்போது கிழக்குப் பகுதியில் நடக்கும் யுத்தங் காரணமாகப் பகைவர்மூலம் குடிசனங்களுக்கு யாதும் ஆபத்து வராமல் தடுத்தற்பொருட்டு நகரத்திலுள்ள பள்ளிக்கூடங்களை இப்போதைக்கு மூடிவிடவேண்டுமென்றும், இந்த விஷயத்தில் அதிகாரிகள் இன்னமும் பராமுகமாகவிருந்தல் வருந்தத்தக்கதென்றும், பகைவருடைய ஆகாயப்படைவந்து வெடிகுண்டுகளைப் பெய்ய நேர்ந்தால் பட்டினவாசிகள் ஓடி ஒதுங்குதற்காகிய ஒதுக்கிடங்கள் ஏதும் அமைக்கப்படவில்லையென்றுங் கருத்துப்படப் பேசிப் பிரேரணை செய்தார்.

குறித்த பிரேரணையை அநுவதிக்கும்போது உடுகம்பகுதிப் பிரதிநிதியாகிய மிஸ்றர் சைமன் அபயவிக்கிரம என்பவர் மேற்படி பிரேரணையை அநுவதிக்கும்போது "இந்த விஷயமாக யோசிக்குமிடத்து நகரத்திலுள்ள பள்ளிக்கூடங்களையும் மூடிவிடுதற்கு நிச்சயித்துவிட்டால், பட்டினவாசிகளை ஒதுக்குதலாகிய கருமத்தில் மூன்றிலொரு பகுதி நிறைவேறிவிடுமென்றும் ஆனால் பள்ளிக்கூடங்களை மூடும் விஷயத்தில் உபாத்தியாயர்கள் உடன்பட வில்லையென்றுங் கூறினர்.

மிஸ்றர் T B ஜயா: (நியமித்த அங்கத்தவர்) அப்படியல்ல, உபாத்தியாயர்கள் பள்ளிக்கூடங்களை மூடும் விஷயத்திற்கு மாறல்லர்.

மிஸ்றர் அபயவிக்கிரம: உபாத்தியாயர்கள் இதற்கு மாறல்லாவிட்டால் வேறு மாறாய் நிற்பவர்யார்? ஏன் இன்னமும் பள்ளிக்கூடங்கள் மூடப்படவில்லை?

மிஸ்றர் H. W. அமரசூரியா: (காலிப்பகுதிப் பிரதிநிதி): "கொழும்பு நகரத்திற்கு மாத்திரமல்ல, கடற்கரையோரமாகவுள்ள எல்லா ஊரிலும் யுத்தகாலப் பாதுகாப்பின் பொருட்டுச் சனங்களுக்கு ஒதுங்கியிருத்தற்காகிய வசதிகளை விரைவிலே தேடிவிடல் வேண்டும்.

திரு. G. G. பொன்னம்பலம்: "கொழும்பு நகரத்தில் வசிக்குஞ் சனங்களுள் பாதிப்பேர் இந்நகரை விட்டு அப்புறம் ஒதுங்கியிருப்பதற்கே இப்பொழுது விரும்புகிறார்கள்; யுத்த ஆபத்துக்காலத்திலும் உத்தியோகத்தவர்கள் முதலாம் பிரதானமானவர்கள் நகரத்தில் தங்கள் தங்கள் தானங்களிலிருந்து கடமை பார்க்கவேண்டு மென்பது நிசம். அப்படிப்பட்டவர்கள் இந்நகரிலே தான் வசிக்கவேண்டி நேரும்; பிரதானமாகத் தேவையில்லாத ஆட்கள் இந்நகரிலுள்ள பெரிய வீடுகளில் இப்பொழுது வசித்துவரின் அவர்கள் தங்கள் பெரிய வீடுகளை இங்கே பிரதானமாக வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு வசிக்கக் கொடுத்துவிட்டுத் தாங்களாகவே ஒதுக்கிடந் தேடிப் போய்விடலாகும்; அப்படிப் போகத் தவறுவர்களை அவர்களை அந்தப் பெரியவீடுகளை விட்டுப் போகும்படி பிரமாணம் விதித்துவிடல் வேண்டும்; இனி, பள்ளிக்கூடங்களை மூடும்விஷயத்தில், அந்தப் பள்ளிக்கூடங்களிற் படித்த பிள்ளைகள் இடையிற் படிப்பை விடவேண்டி நேர்ந்தாலும் பிறகு அப்பிள்ளைகளைப் பழையபடி பள்ளிக்கூடத்தில் ஏற்றுப்படிப்பித்தற்காகிய ஒழுங்குகளைச் செய்தல்வேண்டும். ஆனால் இங்குள்ள அரசினர் கல்லூரியில், யுத்த ஆபத்திற்குப் பயந்து கல்லூரியைவிட்டுச் செல்லும் பிள்ளைகள் பிறகு சேர்க்கப்படமாட்டார்களென்று அக்கல்லூரி அதிகாரிகள் வெருட்டுவதாக நான் கேள்விப்படுகிறேன்; அதுஎவ்வளவிற்கு உண்மையென்பது எனக்குத் தெரியாது."

மிஸ்றர் ஜயா: "பள்ளிக்கூடங்களை மூடும் விஷயமாக உபாத்தியாயர்கள், மௌனஞ் சாதிக்கின்றார்கள்; முந்தி விடுதலை விட்டபோது தாங்கள்எப்பொழுது ஆரம்பிப்பதென்று தெரிவித்த தேதிப்படி பள்ளிக்கூடங்களைப் பழையபடி ஆரம்பித்திருக்கிறார்கள். சனப்பாதுகாப்பு அதிகார உத்தியோகத்தர் பள்ளிக்கூடங்களைப் பழையபடி திறப்பது இங்குள்ள மந்திரிசபையாருக்கு உடன்பாடானபடியால் நீங்கள் பழையபடி ஆரம்பிக்கலாமென்று தெரிவித்துவிட்டார். அதனுற்றான் குறித்த குறித்த தேதிகளில் ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள்.

மிஸ்றா C. W. W கன்னங்கரா (வித்தியாமந்திரி): "சென்றமாசம் அரசாங்கப்படைத் தலைமையதிகாரிகளை, யுத்தப் பாதுகாப்புக்குரிய இடங்கள் எவையென்று விசாரணை செய்தபோது கொழும்பு முழுவதும் பாதுகாக்கப்பட வேண்டிய இடமாகுமென்று தெரிவிக்கப்பட்டது; அப்படி விசாரணை செய்ததன் நோக்கம் கொழும்பிலுள்ள வித்தியாசாலைகளை ஆபத்துக்காலத்திற் பாதுகாப்பிற்காக வேறிடங்களுக்கு அகற்றிவிடுதற்கேயாகும். இந்த மறுமொழி கிடைத்தவுடனே பள்ளிக்கூடங்களை மூடுதலென்ற நோக்கம் தவிர்க்கப்பட்டது; ஆனால் நானும் இப்பொழுது நடக்கும் யுத்தநிலையைச் சாவதானமாக அவதானித்துக்கொண்டுதான் இருக்கிறேன் இன்னும் இரண்டு வாரங்களுக்கிடையில் யுத்த நிலைமையை அவதானித்து எங்கள் நிர்வாக சபைக்கும் மந்திரிசபைக்கும் இந்த விஷயமாக அச்சபைகளின் அபிப்பிராயம் என்னவென்பதை அறிதற்பொருட்டு ஒரு அறிக்கைப்பத்திரம் சமர்ப்பிக்க நினைத்திருக்கிறேன். மேலும் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டால், யுத்தவிஷயமாக ஏதும் தொண்டுசெய்ய முடியாத உபாத்தியாயர்களை என்ன செய்வதென்பதைப்பற்றியுஞ் சிந்திக்கவேண்டியிருக்கின்றது."

மிஸ்றர் S. டீ. வோன் செப்கர: அரசாங்கக்கல்லூரித்தலைவர் இந்தச் சமயத்திலே பள்ளிக்கூடத்திற்கு வராமல்விடும் பிள்ளைகள் பிறகுதம் கல்லூரியில் இடம்பெறார்கள் எனச் சொன்னரென்ற சமாசாரம் மெய்தானா?"

மிஸ்றர் கன்னங்கரா: அந்தவிஷயமாக அவரை நான் ஏதுங் கேட்கமுடியாது; ஆனால் எனது நிர்வாக சபையளவிற் சொல்லுகில் அப்படி விட்ட பிள்ளைகளைத் திரும்பச்சேராமல் விடமுடியாதென்பதை மாத்திரம் நான் சொல்லுவேன்.

ஸேர். டி. பி. ஜயதிலகா (சபை முதல்வர்):- பள்ளிக்கூடங்களை இப்போது மூடும்படி சிபார்சு செய்வதற்கு மந்திரிசபை ஆயத்தமாக வில்லை. நிலைமை மாறினுல் இவ்விஷயம் ஆலோசிக்கப்படும்.

சனங்களை வெளியேற்றுவது சம்பந்தமாக மந்திரிசபை மிகக் கவனமாக ஆலோசித்தது. ஆலோசித்த நகரப்பாதுகாப்புக் கொமிஷனரை அவர்கள் நோக்கத்தை நிறைவேற்றுதற்காகத் தக்க இடங்களில் கூடாரங்களை அமைக்க ஆரம்பிக்கும்படி பணித்துள்ளது.

இன்றியமையாத வேலையாளர்களாய்க் கொழும்பிலேயே வசித்து இப்போது தாம் செய்யுங் கடமைகளைத் தொடர்ந்து செய்வோரது குடும்பங்களுக்கு அவர்கள் தாமாகவே வெளியேறுவதற்குரிய ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கத்தீர்மானித்துள்ளது அவர்களமனைவிமக்களுக்கு இடவசதிகள் அளிக்கப்படும். ஏனையோர் விஷயத்தில் - அஃதாவது தாமாகவே வெளியேற முடியாத வறியமக்கள் விஷயத்தில்-வெளியேற விரும்புவோராகிய பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் கொழும்பு எல்லைக்குள்ளேயே இடங்கொடுக்க வேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டது.

சனங்கள் வெளியேறும் கேழ்க்தாலன்றப் பள்ளிக்கூடங்களை மூடுவதால் பயனில்லை. கொழும்பிலுள்ள பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டால், அப்பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும் பிள்ளைகளுக்கு வேண்டிய கல்வியை அளிப்பதற்குக் கல்வி மந்திரிசபை ஏற்ற ஒழுங்கு செய்தல் வேண்டும்.

### முக்கியமான வேலையாளர்கள்

மிஸ்றர். டட்லி சேனநாயகா:— (டெடிகாமா) முக்கியமான வேலையாளராகிய மனைவிமக்களை வெளியேற்றுந் திட்டம் ஏனையோரது மனைவி மக்களை வெளியேற்றுந் திட்டத்திலும் பார்க்க வேறுபாடுடையதாக இருக்கப் போகிறதா?

ஸேர். டி. பி. ஜயதிலகா:-முக்கியமான வேலையாளர்கள் தத்தம் மனைவிமக்களைச் சந்திப்பதற்கு வாராந்த டிக்கட்டுகள் அளிக்கப்படுவார்கள். அதுதான் வித்தியாசம்.

மிஸ்றர். G. A. வில்லே (நியமன அங்கத்தவர்):- பள்ளிக்கூடங்களை மூடுவதற்குச் சார்பாக எந்த அறிவுள்ள மனிதனும் வாக்களிக்கமாட்டான்.

மிஸ்றர் டி. எஸ். சேனநாயக (விவசாய மந்திரி):- நாம் கட்டாய வெளியேற்றத்தை ஏற்படுத்தாமைக்குக் காரணம் முழுநாட்டின நன்மைக்காகவும் இன்றியமையாத சேவைகள் நடைபெற வேண்டுமென்ற நாம கருதியமையேயாகும்.

பள்ளிக்கூடங்களை மூடினுல், ஏழைகளின் குழந்தைகளே பெரிதும் கஷ்டமுறுவார்கள். செல்வர்களுடைய குழந்தைகள் கொழும்புக்கு வெளியேயுள்ள பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்படுவார்கள்.

திரு S. நடேசன் (காங்கேசன்துறை) கொழும்பிலுள்ள பள்ளிக்கூடங்கள் மூடப்படுமானுல், அப்பள்ளிக்கூடங்களிற் கற்கும் ஏழைப் பிள்ளைகளுக்குக் கல்வியே கிடையாமற் போய்விடும் என்று விவசாய மந்திரியார் நினைத்துவிட்டார். அது பிழையான அபிப்பிராயம். அப்படி மூடப்படும் பக்ஷத்தில் பிள்ளைகள் வெளியேற்றப்பட்டிருக்கும் இடங்களில் தற்காலிக பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

இந்நிலைமையில் (5 மணி) அரசாங்கசபைக் கூட்டம் பெப்ரவரி மீ 10ந்திகதி செவ்வாய்க்கிழமைவரை பின்போடப்பட்டது.

---

## கொள்ளைக்கு மரணதண்டனை கிடைக்கலாம்

### புதிய பாதுகாப்புச் சட்ட விதி

பாதுகாப்புச் சட்ட விதிகளின் திருத்தமொன்று சென்ற வியாழக்கிழமை வெளியான விசேஷ கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி கொள்ளையடிப்பதற்கும் அதுபோன்ற ஏனைய குற்றங்களுக்குஞ் சில சந்தர்ப்பங்களில் மரணதண்டனையாவது ஆயுள் தண்டனையாவது விதிக்கப்படலாம். ஆகாயத்திலிருந்தாவது அல்லது ஏனைய வழிகளிலாவது சத்துருவால் தாக்கப்படும் பகுதி அல்லது தேசாதிபதியால் உத்தரவிடும் பகுதியில் இந்தப் புதிய விதி நடைக்கு வரும்.

இந்த விதியை மீறியதாகக் குற்றஞ்சாட்டப்படும் ஒருவர் சுப்றீம் கோட்டில் விசாரிக்கப்பட்டுக் குற்றவாளியெனக் காணப்பட்டால் அவருக்கு மரணதண்டனையாவது ஆயுள் தண்டனையாவது விதிக்கப்படும். பொலிஸ்கோட்டில் விசாரிக்கப்பட்டு ஒருவர் குற்றவாளி யெனக் காணப்பட்டால் அவருக்கு 12 மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

இந்த விதியை மீறும் குற்றங்கள் வருமாறு:-

சத்துரு தாக்கும்போதாவது அல்லது சத்துருவின் தாக்குதலைத் தடைசெய்து பொதுசனங்களைப் பாதுகாக்கும்போதாவது சேதமடைந்தோ காலிசெய்யப்பட்டோ இருக்கும் வீடுகளில் எந்தப் பொருளையாவது திருடுவது.

யுத்த நடவடிக்கை காரணமாகப் பந்தோபஸ்தின்றி விடப்பட்ட பொருள்களைத் திருடுவது.

சிறைத்தண்டனை விதிக்கப்படக் கூடிய குற்றங்களை இழைக்கும் எண்ணத்தோடு வீட்டிற்குள் நுழைவது. சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பது. எவரையாவது தாக்குவது. கடுமையான ஆயுதங்களையாவது கன்னமிடும் ஆயுதங்களையாவது வைத்திருத்தல்.

சத்துரு நடவடிக்கையைத் தடுக்கும்போது பொதுசனங்களின் கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதிற் கஷ்டமேற்படுமெனத் தாம் கருதும் பகுதியிலும் தேசாதிபதி இந்த விதியை நடைக்குக் கொண்டுவரலாமென்று திருத்தத்திற் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கொலைக்குற்றத்தின் பேரில் தண்டனை விதிக்கப்பட்டவர்களைப் போலவே பாதுகாப்பு விதிகளை மீறியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுச் சுப்றீம் கோட்டில் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள் சம்பந்தமாகவும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

---

## வெங்காய இறக்குமதிக் "கோட்டா"

கசெற் அறிக்கை

வெங்காயம் இறக்குமதி செய்வதற்கு 'லைசென்ஸ்' பெறவேண்டுமானுல், இறக்குமதியாளர் தாம இறக்குமதி செய்யும் 112 ருத்தல் கொண்ட ஒவ்வொரு நூறுமூடைக்கும் 112 ருத்தல் கொண்ட 25 மூடை இலங்கைவெங்காயம் வாங்க வேண்டுமென்று விவசாய விளைபொருட்சட்டத்தின் கீழ்க் கோட்டா அளவு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகச் சென்ற வெள்ளிக்கிழமை வெளியான கசெற்றிற் சொல்லப்படுகிறது.

---

## யுத்த சேத இன்ஷூரன்ஸ் சட்டம்

### முதன் முறையாக நிறைவேறியது

அரசாங்கசபையின் சென்ற புதன்கிழமைக் கூட்டத்தில் சத்துரு நடவடிக்கை காரணமாகவும் சத்துருவின் தாக்குதலை எதிர்த்து விரட்டும்போதும் வர்த்தகப்பொருள்களுக்கு ஏற்படக்கூடிய சேதத்திற்கான இன்ஷூரன்ஸ் சட்டத்தைத் தொழில் மந்திரி முதன் முறையாகப் பிரேரித்தார்.

அவர் பேசும்போது குறித்த சட்டத்தில் "இன்ஷூர்" செய்ய அநுமதிக்கப்பட்டுள்ள பொருள்களின் பட்டியலில் அவசியமான மாறுதல் செய்ய முடியுமென்றும் இந்தியாவில் நடையிலிருக்கும் திட்டத்தைப்போலவே இத்திட்டமும் இருப்பதாகவும் அரசாங்கத்தான் இத்திட்டத்தை நடையிற் கையாளுவார்களாயினும் இப்போதைய இன்ஷூரன்ஸ் கம்பெனிகளிடம் இவ்வேலை ஒப்படைக்கப்படலாமென்றும் தெரிவித்தார். மேலும் இங்கிலாந்தில் நடையிலிருக்கும் யுத்த சேதச் சட்டத்தைப் போலவே இலங்கையில் தாவர சொத்துக்கள் சம்பந்தமான திட்டம் இருக்குமென்றும் சங்கம சொத்துக்கள் சம்பந்தமான திட்டம் தானுகவே நிறைவேற்றப்படவேண்டியதாகு மென்றும் வியாபாரத்திற்கெனச் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் பொருள்களைத்தான் குறித்த சட்டம் குறிப்பிடுவதால் அதில் அச்சிபத்திரங்கள் சேர்க்கப்படவில்லை யென்றும் மிஸ்றர். கொறியா விபரித்தார்.

சட்டம் முதன்முறையாக நிறைவேறியது.

சட்டம் இரண்டாம் முறையாக இன்று பிரேரிக்கப்படு மென்று மிஸ்றர். கொறியா குறிப்பிட்டார்.

---

## கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில் அதிருப்தி

### கண்டனத்தைத் தெரிவிக்கக் கடைகளை மூடினர்

கம்பஹா ஜன 30 உணவுப் பொருள்களின் கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில் அதிருப்தி யடைந்த நித்தம்புவை வட்டுப்பிட்டிவலை பெப்பிலியானை ஆகிய இடங்களிலுள்ள வர்த்தகர்கள் தங்களுடைய கண்டனத்தைத் தெரிவிப்பதற்காக நேற்றுக்காலை தமது கடைகளைத் திடீரென மூடிவிட்டனர்.

கொழும்பு மார்க்கெற் விலைப்படி உணவுப் பொருள்களை விற்பதால் கஷ்டமேற்படுவதாகவும் போக்குவரத்துச் செலவை உத்தேசித்து விலைகளைக் குறித்த விகிதத்தை விடச் சற்று அதிகரித்தால் தங்களுக்குத் தண்டனை விதிக்கப்படுவதாகவும் அவர்கள் முறைகூறுகின்றனர்.

இந்தச் சமாசாரமறிந்து சில சொன்ஸ்டபிள்களுடன் நித்தம்புவைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஸ்தலத்திற்கு விரைந்து சென்றார். நெருக்கடி நியமனம் பெற்ற உதவி மாகாணத்தலைவர் மிஸ்றர் பி. எப். பெரேராவும் உதவிப் பொலிஸ் சுப்பிறிண்டெண்ட் மிஸ்றர், ஆர். ஈ. பிலேஸ்மூம் ஸ்தலத்திற்கு வந்து வர்த்தகர்களுடன் கலந்துபேசினர்.

கம்பஹாவுக்குமுன், ஒரு திருப்திகரமான சமரசம் ஏற்பட்டுவிட்டது. பிறகு கடைகளும் திறக்கப்பட்டன.

---

## இராமநாதன் பெண்கள் ஆசிரிய கலாசாலைப் பிரவேச பரீக்ஷை 1942.

தமிழ் சிரேஷ்ட பாடசாலைத் தராதர பத்திரம் அல்லது ஆங்கில சிரேஷ்ட பாடசாலைத் தராதர பத்திரம், சீனியர் அல்லது லண்டன் மற்றிக்குலேஷன் பரீக்ஷைகளில் தேறியோர் நேர்முகப் பரீக்ஷைக்கும் இக்கலாசாலையில் அநுமதிக்கப்படுதற்கு 15-2-42 இலன்று அல்லது அதற்குமுன்னர்த் தலைமையாசிரியைக்குத் தமது விண்ணப்பப் பத்திரங்களை அனுப்புக.

விண்ணப்பப் பத்திரங்கள் வித்தியாகர்த்தரிடமிருந்து பெறப்படும் குறித்த பத்திரங்களில் நிரப்பி அனுப்பப்படுதல் வேண்டும்.

(ஸ்ரீமதி) A. மயில்வாகனம்
தலைமையாசிரியர்
இராமநாதன் ஆசிரிய கலாசாலை
சுன்னுகம்

28. 1 .42

Mis 176 29. 1. 42—2.2.42.

### திருத்திக்கொள்க.

மேற்படி விளம்பரத்தில் "சீனியர் அல்லது லண்டன் மற்றிக்குலேசன் பரீக்ஷைகளிற் றேறியோர்" என்று சென்ற வியாழக்கிழமைப் பிரசுரத்தில் வெளிவந்திருப்பதைச் "சீனியர் அல்லது லண்டன்மற்றிக்குலேசன் பரீக்ஷைகளில் தேறியோர்" என்று திருத்திக் கொள்க.

## "பெற்றோல் இல்லாவிட்டால் நடந்து செல்லுக"

### தோட்ட வைத்திய அதிகாரிகளுக்கு உத்தரவு

தொழிலாளரின் சுகாதார நிலைமைச் சீர்திருத்தம்

தோட்டப்பகுதிகளிலுள்ள வைத்திய அதிகாரிகள் தோட்டங்களில் நோயாளிகளைக் கவனிப்பதற்காக அழைக்கப்பட்டால் பெற்றோல் அல்லது கார் இல்லையென்பதற்காக அங்குபோக மறுக்கக் கூடாதென்றும் நடந்தாவது செல்லத்தான் வேண்டுமென்றும் தற்காலிக சுகாதார மந்திரி ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

தோட்டங்களில் நோயாளிகளைக் கவனிக்க அழைக்கும்போது அவ்வாறு செய்யத் தவறும் வைத்திய அதிகாரிகள் சம்பந்தமாகக் கண்டிப்பான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறு சுகாதார வைத்தியப் பகுதித் தற்காலிக மந்திரி அறிவித்திருக்கிறார்.

இந்த உத்தரவைச் சென்ற வெள்ளிக்கிழமை சுகாதார நிருவாகசபை அங்கீகரித்திருக்கிறது.

தோட்டப்பகுதிகளில் தொழிலாளர்களின் வாசஸ்தலங்களுடைய நிலைமையைச் சீர்திருத்தும் விஷயமும் பரிசீலனை செய்யப்பட்டது.

யுத்த நிலைமை காரணமாக அதிகமான சாமான்கள் கிடைக்காததால் தோட்டத் தொழிலாளரின் வாசஸ்தலங்களை இடித்து மறுபடியும் கட்டும்படி சிபார்சு செய்யக்கூடாதென்றும், அவைகளின் சுகாதார நிலைமையைப் பிரதானமாகச்சீர்திருத்த வேண்டுமென்றும் தோட்டங்களுக்கு விஜயஞ் செய்யும் வைத்திய அதிகாரிகளுக்கு உத்தரவிடத் தீர்மானிக்கப்பட்டது.

## மின்னேரியாவுக்குச் செல்லும் தொழிலாளர்கள்

### புகைரதக் கட்டணத்தில் சலுகை

மின்னேரியாவுக்குச் செல்லும் தொழிலாளர்களுக்குக் குறைந்த புகைரதக் கட்டணங்களைப் போக்குவரத்து நிர்வாகசபை அநுமதித்திருக்கிறது.

கிளிநொச்சியிலும் பரந்தனிலும் உள்ள பண்ணைகளில் வேலை செய்யுந் தொழிலாளர்களுக்குத்தான் இதுவரை குறைந்த கட்டணச் சலுகை வழங்கப்பட்டது. இனி இவர்களும் மின்னேரியா செல்லுந் தொழிலாளர்களும் சமசலுகைகளைப் பெறுவார்கள். இதனால் உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நன்மை பெறுவார்கள்.

## வைத்தியக் கல்லூரியும் இலங்கைச் சர்வகலாசாலையும்

### தொடர்புகள் பற்றிச் சுகாதார நிர்வாகசபையாரின் ஆலோசனை

சென்ற வெள்ளிக்கிழமை சுகாதார நிர்வாகசபையின் கூட்டம் நடைபெற்றபொழுது புதிய சர்வகலாசாலைக்கும் இலங்கை வைத்தியக் கல்லூரிக்குமுள்ள தொடர்பு பற்றி ஆலோசிக்கப்பட்டு இவ்விஷயம் சம்பந்தமாய்த் தற்காலிக சுகாதார மந்திரி சமர்ப்பித்துள்ள சிபார்சுகள் அங்கீகரிக்கப்பட்டன.

வைத்தியக்கல்லூரி அமைப்புச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்றும் நிர்வாகசபை தீர்மானித்திருக்கின்றது.

இந்தப் புதிய சட்டத்தின் பிரகாரம் இலங்கையின் வைத்தியக் கல்வி இலங்கைச் சர்வகலாசாலைக்கு மாற்றப்படும். வைத்தியப்பட்டங்களையோ அல்லது தராதரப்பத்திரங்களையோ பெறும் வைத்திய மாணவர்களைப் பதிவு செய்யும் கடமை கல்லூரிச் சபைக்கு உண்டு. வைத்தியத்தொழில் நடத்த "லைசென்ஸ்" வழங்கும் கடமையும் அதற்கு உண்டு. மேலும், பல் வைத்தியர்கள், ஆயுள்வேத வைத்தியர்கள், அப்போதிக்கரிகள், மருந்து கலப்பவர்கள், தாதிமார் ஆகியவர்களுக்குப் பயிற்சியளிப்பது, அவர்களைப் பதிவு செய்வது, அவர்களின் வேலையை நிர்வகிப்பது ஆகிய இவை சம்பந்தமான பொறுப்பும் வைத்தியக்கல்லூரிச் சபைக்கு உண்டு.

சர்வகலாசாலை அமைக்கப்பட்டதும், வைத்தியக் கல்லூரியின் போசிரியர்களும் போதனாசிரியர்களும் தாங்கள் பெரிய ஆஸ்பத்திரியிலோ அல்லது கொழும்பிலுள்ள மற்றைய ஆஸ்பத்திரிகளிலோ ஆற்றிவரும் கடமையை வழக்கம்போலச் செய்து வருவதோடு தமது போதனா கடமைகளைக் கல்லூரியில நடத்துவர்.

## கடிதம்

### இந்துசாதனப் பத்திராசிரியர் அவர்கட்கு

ஐயா!

யாழ்ப்பாணத்துள்ள படக்காட்சிச் சாலைகளில் இரவு 10 மணிக்குமேல் காட்டப்படும் இரண்டாவது காட்சியைக் காட்டாமல் நிறுத்த வேண்டுமென்று யாழ்ப்பாணம் பட்டினசபையார் கொண்டுவந்துள்ள சட்டம் படம் பார்க்கும் பொதுசனங்களுக்குப் பெரிய வசதியீனத்தை உண்டாக்கியிருக்கின்றது. படம் பார்ப்பதால் தீமை ஏற்படுகிறதென்று கருதியே பட்டினசபையார் இவ்வாறு செய்திருக்கின்றார்கள் என்று கருதுவதற்கும் இடமில்லை. ஏனெனில் அவர்கள் பகலிற் படக்காட்டலாம் என்றும், இரவில் 6.30 மணிதொடக்கம் காட்டும் படக்காட்சியையும் காட்டலாம் என்றும் அநுமதித்திருக்கிறார்களாதலால், இரவில் 10 மணிக்குமேல் காட்டும் காட்சிக்குப் பதிலாக, பகலிற் காட்டலாம் என்ற ஒழுங்கு பலருக்குப் பெரிய வசதியீனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஏனெனில் பகலில் தத்தம் வேலைகளுக்குப் போக வேண்டியவர்கள் படம்பார்க்கப்போக அவகாசம் கிடையாமற் போகின்றது. அன்றியும் மாணவர்களாயுள்ளார் சிலர், தமது பெற்றோருக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போவதாகச் சொல்லிப் படக்காட்சிகளுக்குப் போய்ப் படிப்புக் கெட்டுப்போகக் கூடியதாக நேருகிறது. அப்படிப்பட்ட சம்பவங்கள் அண்மையில் சில நடந்ததை அண்மையில் இந்துசாதனப் பத்திரிகையில் ஒருவர் எழுதி வெளியிட்டதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இப்படிப்பட்ட நிலைமைக்கு இடந்தரும் இப்பட்டினசபையார் இரவு 10 மணிக்கு மேல் காட்டப்படும் காட்சிக்குத் தடை விதித்ததை என்னவோ தெரியவில்லை. இந்தப் புதிய முறை இலங்கையிலோ இந்தியாவிலோ வன்ன வேறு எந்தப் பட்டின சபையாராலும் கையாளப்பட்டதாகவும் தெரியவில்லை. எல்லாப்படங்களும் தீமைவிளைவிப்பன வல்ல. சில படங்கள் பொதுசனங்களுக்குப் பெரிய அறிவை அளிக்கக் கூடியனவாக இருக்கின்றன என்பதைக் கற்றறிந்த எவரும் ஒத்துக்கொள்வர். சமூகச்சீர்திருத்தம், பூமிசாஸ்திர அறிவு, அரசியற்கொள்கை விளக்கம், புராதன சரித்திர புராணவரலாறுகள், போர்முறைகள், நவீன யந்திர விமான முன்னேற்றங்கள் முதலிய இன்னோரன்ன அரிய விஷயங்களைப் பார்ப்போர், பிரத்தியக்ஷமாகக் கண்டு அறிந்து அறிவைப் பெருக்கிக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் படங்கள் வாயிலாக எமக்குக் கிடைக்கின்றன. நடிப்புத்திறம், சங்கீதம் முதலிய கலைகளை விருத்தி செய்வோர்க்கும் படக்காட்சிகள் பேருதவி புரிகின்றன. இத்தகைய வசதிகளை யளிக்கும் படங்களைப் பார்த்து மகிழக்கூடிய ஒழுங்குகளைப் பட்டினசபையார் இட்டதைக்கட்டிப் போட்டிருப்பது இரவு 10 மணிக்குமேலே படம்பார்க்கக் கூடிய வசதியுள்ள பெரும்பாலோர்க்குப் பெரும வசதியீனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பொதுசன நன்மைக்கும் வசதிக்குமாகச் சுருமமாற்றும் யாழ்ப்பாணப் பட்டினசபை இவ்வாறு செய்திருப்பதைக் கண்டு நாம் பெரிதும் வியக்கின்றோம். இலவமட்டோர் இப்போது பெற்றோல் கட்டுப்பாடு நடைபெறுகின்றது. போதிய பெற்றோலைப் பெற்றுக்கொள்ள முடியாமலிருக்கும் இக்காலத்தில் வெளியூர்களிலிருந்து படம் பார்க்கலாமென்று வந்து இரவில் 10 மணிக்கு மேற் படம் காட்டப்படுவதில்லையென்று அறிந்து வருந்திப் பட்டினசபையாரை வைதுகொண்டு திரும்பும் பல குடும்பங்களை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

ஆகவே, இத்தகைய கஷ்டங்கள் இனிமேலும் யாழ்ப்பாணப் பொதுமக்களுக்கு நேராமல பொதுசன நன்மைக்காக உழைக்கும் பட்டினசபையார் இனியாவது தாம் இயற்றிய அச்சட்டத்தை நீக்கிப் பொதுசனங்கள் தமக்கு வசதியான நேரத்தில் படம் பார்க்கக்கூடிய ஒழுங்கைச் செய்வார்களாக. கற்றறிந்த பட்டினசபை அங்கத்தவர்கள் இவற்றைச் சீர்தூக்கிப் பார்ப்பார்களாக.

இங்ஙனம்,
V. S லிங்கம்

## சங்கத்தானை ஐக்கியசங்கப் பத்தாண்டு நிறைவுவிழா

ஷை விழா சென்ற (24.1.42) சனிக்கிழமை சாயந்தரம் 6½ மணியளவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் திரு. C. இரகுநாதன் (உபபதிவுகாரியஸ்தர்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வந்தனோபசாரப்பா படிக்கப்பெற்றதும் சங்கத்தின் பத்தாண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. அதன்பின் திரு. கடராசா (மேற்பார்வைச்சங்கப் பரிசோதகர்) ஒத்துழைப்பு இயக்கம் என்னும் விஷயமாகவும் திரு. கனகரத்தினம் (கமத்தொழிற் போதகர்) இன்றைய தேவைகள் என்னும் விஷயமாகவும், திரு. அமரசிங்கம் (டி. எம். ஓ.) நோயாளர்ப் பராமரிப்பும் உணவூட்டும் முறையும் என்னும் விஷயமாகவும் முறையே மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அதன்பின் தலைவர் உரையில் தலைவர் சங்கத்தின் நன்முயற்சிகளைப் பாராட்டிப் பேசினார். தலைவர்க்கும் சொற்பொழிவாளர்க்கும் சபையோர்க்கும் நன்றிகூறக் கூட்டம் இனிதுநிறைவெய்தியது.

கடித —

# ஜனங்களின் யுத்தகாலப் பொறுப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தக்கொள்ளும் மனோபாவமிருக்குமானால், சிரிப்பதால் பயனில்லை. இனி விஷயத்தைக் கவனிப்போம்.

### வைக்கோல் போர்களுக்கிடையில் கழுதை

ஆஸ்திரேலியாவை எதிர்நோக்கியிருக்கும் நிலைமை நம்மையும் எதிர்நோக்கியிருக்கிறது. அதில் சிறிது ஆறுதலுமிருக்கிறது. நான் சொல்லப்போகும் விஷயம் கொடியது. சொல்லவே பிசகு. இருந்தாலும் அதனால் ஆஸ்திரேலியாவும் ஒருவகையில் ஆறுதலடையலாமாகையால் சொல்லுகிறேன். எதிரி ஆஸ்திரேலியாவில் காலைவைத்தால் இந்தியாவுக்குச் சிறிது ஆபத்துக் குறையும். அதேமாதிரி இந்தியாவில் காலைவைத்தால் தனக்கு ஆபத்துக் குறையுமென்று ஆஸ்திரேலியாவும் நினைக்கலாம். இரண்டு வைக்கோல் போர்களுக்கிடையில் ஒரு கழுதை நின்றுகொண்டு இதைத் தின்னலாமா? அதைத் தின்னலாமா? என்று யோசித்து முடிவில் இரண்டையும் தின்னவில்லையென்று ஒரு கதை உண்டு. ஆனால், அந்தக்கழுதையைப்போல ஜப்பான் முட்டாளில்லை. ஏதாவது ஒன்றைக் சுபளீகாஞ்செய்யத் தீர்மானித்துவிடலாம். சனிபகவான் எதிரியை எந்தப்பக்கம் அழைத்துச் செல்லப் போகிறான்? தெற்கிலா? மேற்கிலா? இதுதான் இப்பொழுது கேள்வி. ஆகவே, இன்றைய விஷயத்தைப்பற்றி நாம் சிரத்தையுடன் ஆராய்வதற்கும் அதற்கு ஒருமுடிவு கண்டுபிடிப்பதற்கும் நமது முடிவுக்குத் தக்க பதில்பெற முயல்வதற்கும் அவசியமேற்பட்டிருக்கிறது.

### அரசாங்கம் பொறுப்பாளி

இந்தியா இன்றுள்ள நிலைமைக்கு இப்பொழுது அதிகாரஞ் செலுத்திவரும் அரசாங்கந்தான் ஜவாப்தாரி. "இந்தியாவிடம் எங்களுக்குள்ள நீண்டகாலத் தொடர்பால் எங்களுக்குப் பல பொறுப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றை நாம் விட்டுமுடியாது" என்று சில மாதங்களுக்குமுன்புதான் பிரிட்டிஷ் அரசாங்கம் சொன்னார்கள். காங்கிரஸுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் தகராறு ஏற்பட்டுக் காங்கிரஸ் தனது அரசியல் கோரிக்கையை வெளியிட்டபோது பிரிட்டிஷார் சொன்ன வார்த்தை இது. அவர்கள் ஒப்புக்கொண்டுள்ள பொறுப்புகளில் இத்தேசத்தின் பாதுகாப்பும் ஒன்று. அரசியல் கோரிக்கைக்குப் பதில் சொல்ல அந்த வார்த்தைகளே போதும். ஆனால், எதிரி வாயிலில் வந்தபோது பொறுப்பு மிகக் கடுமையாகிவிடுகிறது. பயந்ததற்கு இடமில்லையென நம்பிக்கையுடனிருப்போம். ஆனால், உலகத்தில் காரியங்கள் எப்படி நடைபெறுகின்றனவென்பதைக் கவனிக்கும்போது ஒரு விஷயம் புலப்படுகிறது. வீடு இரண்டுபட்டால எதிரி தாக்குதலைச் சமாளிப்பது சாத்தியமென்று அறிகிறோம்.

### தலையும் உடலும் பிரியலாமா?

நமது வீடு எப்படி இரண்டுபட்டிருக்கிறது? முன்பு நாம் அரசியல் கோரிக்கைகள் விடுத்தபோது "உங்கள் நாட்டில் ஹிந்து முஸ்லிம் பிணக்கிருக்கிறது. ஹரிஜனங்களுக்கும் ஜாதி ஹிந்துக்களுக்கும் தகராறு இருக்கிறது" என்றெல்லாம் முகத்திலடித்தாற்போல நமக்குப் பதில் சொன்னார்கள். ஆனால், இன்று எதிரியின் பீரங்கிகளுக்கு அது தக்க பதிலாகுமா? முன்பு சொன்ன பிளவுகள் ஜனங்களுக்குள் இருந்தவை. ஒரு கைக்கும் மறுகைக்கும் பேதமேற்பட்டால் தலை பார்த்து அவற்றைச் சரிகட்டிக்கொண்டு போக முடியும். ஆனால் தலைக்கும் உடலுக்கும் பிரிவு ஏற்பட்டுவிட்டாலோ (கரகோஷம்) அத்தகைய பிரிவு இன்று ஏற்பட்டிருக்கிறது. தலைமை வகிக்கும் அரசாங்கத்துக்கும் உடலான மக்களுக்கும் இன்று பிளவு ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் வீடு இப்படி இரண்டுபடுவதை நாம் சகிக்க முடியுமா? ஜனங்களும் அரசாங்கமும் பிரிந்து நிற்பதைத்தான் பொறுக்க முடியுமா?

### பதில் போதுமா?

இதற்கு அரசாங்கம் என்ன பதில்சொல்வார்கள்? "லிபியா பாலைவனத்திலும் மலேயாத் தோட்டங்களிலும் வீரத்துடன் போராடும் சைனியங்களைப் பார்" என்று சொல்லுவார்கள். இதில் சந்தேகமில்லை. யுத்தவீரர்கள் சண்டைபோடுகிறார்கள். தேச மக்களிடமிருந்து சாமானும் கிடைக்கிறது. இது ஒத்துழைப்பென்பதில் சந்தேகமில்லை. யுத்த சாதனத் தொழிற்சாலைகளிலுள்ள சில லக்ஷம் பேரைக் கழித்துவிடுவோம். மீதியுள்ள 30 கோடி ஜனங்கள் எப்படி? இவர்கள் அரசாங்கத்தை ஆதரிக்கிறார்களா? ஆம் என்று அரசாங்கத்தார் சொல்லலாகும். ஜனங்கள் என்ன புரட்சி செய்யக் கிளம்பிவிட்டார்களா? இல்லை. வரி செலுத்தவில்லையா? செலுத்துகிறார்கள். அதிகக் கூக்குரலாவது போடுகிறார்களா? அதுவுமில்லை (சிரிப்பு). இப்படியெல்லாம் அரசாங்கத்தார் சொல்வார்கள். ஆனால் இது சமாதானம் போதுமா? இது சிவில் நிர்வாகம் நடத்துபவர்களுக்குப் போதும். ஆனால் தேசப் பாதுகாப்புக்குப் பொறுப்பாளியான இராணுவ அதிகாரிக்குப் போதாது.

### பிணத்தின் பளு

அநுகூலமில்லாத ஜனங்களைத் தூக்கிச் செல்வது கஷ்டம். உயிருள்ள மனிதனை விட அசைவற்றிருக்கும் பிணத்தின் பளு அதிகம். தாய் குழந்தையைத் தூக்கிச் செல்வது சுலபம். குழந்தை அவளை அணைத்துக்கொள்கிறது. ஆனால் அவ்வித ஒத்துழைப்பை அளிக்க முடியாத இரும்பையோ, கல்லையோ தூக்கிச் செல்வது மிகச் சிரமம். அதேமாதிரி இந்தியாவிலுள்ள 30 கோடி ஜனங்களும் அரசாங்கத்தாரிடம் அநுதாபமற்றவர்களாயில்லாது ஒத்துழைப்பார்களானால் அவ்விஷயத்தை வைத்தாய் ஜப்பானியர்களுக்கு எடுத்துக்காட்ட முடியும். ஜப்பானியர் 9 கோடி ஜனங்கள். நாம் 30 கோடி பேர். இவர்களனைவருடைய அநுதாபமுமிருந்தால், தாய் குழந்தையைச் சுலபமாகச் சந்தோஷத்துடன் தூக்கிச் செல்வதுபோல் இவர்களை உடனழைத்துச் செல்லலாம். இன்று தாய்க்கும் குழந்தைக்கும் மனஸ்தாபமேற்பட்டிருக்கிறது.

தேசத்திலுள்ள இரண்டு பெரிய ஸ்தாபனங்கள் முஸ்லிம்லீகும் காங்கிரஸும் (இந்த சமயத்தில் ஒருவர் எழுந்திருந்து "ஹிந்துமகாசபைதான் ஹிந்துக்கள் பிரதிநிதி" என்று ஆரம்பித்தார். ஜனங்கள் கூச்சலிட்டு அவரை உட்காரச் செய்தார்கள்.)

ராஜாஜீ மேலும் பேசியதாவது:- நான் சொல்லும் வார்த்தைகளை முழுதும் கேட்டுக்கொண்டு தலையிடுவது நல்லது. இத்தேசமக்கள் இரண்டு ஸ்தாபனங்கள் மூலம் அதாவது முஸ்லிம் லீக் காங்கிரஸ் இவற்றின் மூலம் தங்கள் ஒத்துழையாமையை அரசாங்கத்துக்குத் தெரிவித்தார்கள் என்று சொல்ல வந்தேன். ஹிந்துமகாசபை யுத்தத்தில் ஒத்துழைக்கவில்லையென்ற விஷயம் எனக்குத் தெரியாது. (கரகோஷம்)

### எத்தகைய ஒத்துழைப்பு?

தேசத்திலுள்ள இரண்டு பெரிய ஸ்தாபனங்கள் (முஸ்லிம்கள் பிரதிநிதி யென்று சொல்லிக்கொள்ளும் ஒரு ஸ்தாபனமும் தேசத்திலுள்ள வகுப்புவாதமற்ற தேசிய உணர்ச்சிகளைப் பிரதிபலிக்க உரிமை கொண்டாடும் ஒரு ஸ்தாபனம்) ஒத்துழைக்காத அரசாங்கம் அதிகாரத்திலிருப்பது தேசத்துக்கு அபாயம். ராஜாஜீயையும் ஜின்னாவையும் தலைவர்களாகக் கொண்ட மேற்கூறிய இரு ஸ்தாபனங்களும் ஒத்துழைக்கிறார்கள் என்று அரசாங்கம் பதில் சொல்வதாற் பயனில்லை. இப்பொழுது அரசாங்கத்துக்குக் கிடைக்கும் ஒத்துழைப்பு உண்மையில் ஒத்துழைப்பாகாது. நவீன யுத்த முறையில் அரசாங்கத்துக்கு மிக அவசியமான ஜீவசக்தியுடன் கூடிய தேச மக்களின் ஒத்துழைப்பு இப்பொழுதுள்ள அரசாங்கத்துக்குக் கிடைக்கவில்லை. சீனாவிலும் ரஷியாவிலும் நடந்த யுத்தங்களைப்பற்றி நீங்கள் பத்திரிகைகளில் வாசித்திருப்பீர்கள். அத்தேசமக்கள் எதிரியோடு காடுகளிலும் மலைகளிலும் சண்டைபோட்டுக்கொண்டு ராஜ சனங்களாக ராஜதுரோகிகள்போல எதிரியுடன் கெரில்லாகப் போராடிக்கொண்டு [illegible] வாசித்திருப்பீர்கள். ஒவ்வொரு அடியையும் எதிரி சிரமப்பட்டுப் பிடிக்க வேண்டியதாயிற்று. அம்மாதிரி ஒரு ஒத்துழைப்பை யுத்தவீரர்கள் மாத்திரம் அளித்துவிட முடியுமா? "நாமனைவரும் யுத்தவீரர்கள். வெற்றியில்லாவிட்டால் நமக்கு வாழ்வு இல்லை. ஆகையால் அனைத்தையும் தியாகம் செய்வோம்" என்று ஜனங்கள் ஒரு முகமாக நினைக்க வேண்டும். நவீன யுத்தமுறையில் இதுதான் மிக அவசியம். பர்மா கவர்னர் இத்தகைய ஒத்துழைப்பைத்தான் ஜனங்களிடமிருந்து கேட்டார்.

### ஒழிந்த விளக்குகள்

"பர்மிய மக்களே! ஜனங்களே! ஒன்றுபட்ட சமூகங்கள், உங்கள் வீடுகளிலிருந்தும் குடிசைகளிலிருந்தும் எதிரியுடன் போராடுங்கள். எதிரிக்கு இடங்கொடாதீர்கள்" என்று பர்மா கவர்னர் கூறினார். அத்தகைய ஒத்துழைப்பைப் பெற நமது கவர்னர் என்ன செய்திருக்கிறார் என்று கேட்கிறேன். உத்தியோகத்திலிருந்த [illegible] காட்களாக [illegible] என்ன செய்திருக்கிறார். இப்பொழுதுதான் என்ன செய்கிறார்?

"இந்தியா ஒத்துழைக்கிறது: இந்த மாகாணங்கள் [illegible] ஒத்துழைக்கிறார்கள்" என்று சொல்வதால் உபயோகமில்லை. அப்படிச் சொல்வது உண்மையாகாது. இந்த நிலைமையில், நாம் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குப் பிரியமான வார்த்தைகளைச் சொல்லி அவர்களைத் திருப்தி படுத்துவதா முறை? "நமக்குச் சுதந்திரம் வேண்டியதில்லை. இப்பொழுதுள்ள நிலைமையிலேயே திருப்தியடைகிறோம். ஆனால், எங்கள் வீட்டுக் கூரைகளைப் பிடுங்கித் தள்ளுகிறோம்; எதிரி அணுகும்போது சாமான்களை அழித்துவிடுகிறோம்" என்று சொல்லமுடியுமா? விசையில்லாதபோது மின்சார விளக்குகள் நன்றாக எரியுமென்று சொல்வதில் அர்த்தமென்ன இருக்கிறது? விசையை அனுப்புவதற்கான மெயின் ஸ்விச்சின்மீது பிரிட்டிஷார் கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மெயின் ஸ்விச் இறங்கினால்தான் விளக்குகளில் ஒளி காணலாம். இந்தியாவிலுள்ள 30 கோடி மக்களின் இருதய விளக்குகளையே குறிப்பிடுகிறேன். (பலத்த கரகோஷம்)

### சர்ச்சில் மனோபாவம்

அமெரிக்காவுக்குத் தூதர் ஒருவரைப் பிரிட்டன் அனுப்பிக்கொண்டிருப்பதால் பயனென்ன? அமெரிக்கா புரட்சி செய்து பிரிட்டனிடமிருந்து பிரிந்துபோய் விட்டது. நாம் இன்னும் பிரிட்டனுடனிருக்கிறோம். பூகோளப்படத்தில அமெரிக்காவுக்கு நீல நிறம் பூசியிருக்கிறார்கள். பிரிட்டனுக்கு இருக்கும் சிவப்பு வர்ணத்தைத் தான் நமது தேசத்துக்கு அடித்திருக்கிறார்கள். அப்படியிருக்கப் பிரிட்டிஷ் தூதர் இந்தத் தேசத்துக்கு வந்து ஜனங்களின் உண்மைத் தலைவரோடு அல்லவா சமாதானம் செய்துகொள்ள வேண்டும்? அப்படிச் செய்துகொள்வதில அவர் அக்கறை காட்டவில்லை. அமெரிக்காவுக்குப் போய் வருகிறார். பறந்து போய்வருகிறாரென்று சொல்வது அதிகமாகப் பொருந்தும். திரும்பி வந்ததும இந்தியா சார்பாகக் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்வதில்லை. இந்தியாவிலுள்ள 30 கோடி விளக்குகளை எரியத் தூண்டுவதற்கு இது வழியாகாது. அப்படி இந்திய மக்களின் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பாவிட்டால பாதுகாப்புப் பிரச்னை மிகக்கஷ்டமானது என்று சொல்கிறோம். இது தான், இப்பொழுது ஏற்படுகின்ற நெருக்கடியின் உண்மை அர்த்தம். இந்தப் பொல்லாத ஜப்பானியர் போரில் இறங்கியிராவிட்டால் இந்தியநெருக்கடி எவ்வளவு காலம் வேண்டுமானாலும் முடிவடையாதிருக்கலாம்.

### தோன்றியுள்ள சந்தேகம்

ஆனால், இப்பொழுது இந்தியாவின் பாதுகாப்பு மிகவும் பிரதானமான பிரச்னையாகிவிட்டது. பிரிட்டிஷார் இதுபற்றி அதிக கவலை கொள்ளாதிருக்கலாம். பிரிட்டன் நன்றாகப் பாதுகாக்கப் பட்டிருக்கிறது. பிரிட்டனைச்சுற்றி பெரிய சமுத்திரமிருக்கிறது. அது சிறிய தீவு. அதிலிருக்கும் ஜனங்களும் வீரர்கள். தொன்றுதொட்டு, பிரிட்டிஷ் ஜனங்கள் எதிரிகளைத் தங்கள் நாட்டில் புகவிடாது காத்திருக்கிறார்கள். ஆனால், நமதேச நிலைமை அப்படியல்ல. இந்தியாவின் பாதுகாப்பு பிரிட்டனின் பாதுகாப்பைப்போல சுலபமானதல்ல. தவிர, அது நமது கையிலுமில்லை. இந்தியாவின் பாதுகாப்பு விஷயத்தில் பிரிட்டன் என்ன கொள்கையைக் கையாளும் என்பது பற்றிப் பலரிடை சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால்தான் தேச நெருக்கடியும் பாதுகாப்பையும் பற்றிச் சேர்த்து யோசிக்கும்போது பிரச்னை மிகப் பலமானதாகத் தெரிகிறது. கவலையூட்டத்தக்கதாகவும் இருக்கிறது.

### தேசங்கள் பேசும் வழி

இதையெல்லாம் நான் உங்களிடம் ஏன் சொல்கிறேன். சர்ச்சிலிடம் நேராக ஏன் சொல்லக்கூடாது? என்று கேள்விகள் எழக்கூடும். மனிதனுக்கு மனிதன் அம்மாதிரிப் பேசிக்கொண்டாலும் நாடுகள் ஒன்றுக்கொன்று அவ்விதம் பேசமுடியாது. இந்த வழியிலேதான் நாடுகள் பேசமுடியும். ஹிமாலயத்திலிருந்து கன்யாகுமரிவரை பிரிட்டிஷ் கொள்கை பற்றிக் கண்டனம் கிளம்பினால்தான் இந்தியாவின் வார்த்தை பிரிட்டன் செவி[illegible]யில் ஏறும். மத்திய அரசாங்கத்தில் எல்லோரும் இந்தியர்களாயிருந்தால் எல்லாம் சரியாகப் போய்விடுமென்று சில படித்த மனிதர்கள் சொல்வதால் உபயோக மெதுவுமில்லை. அதனால் விளக்குகள் எரியாது. அதனால் கோபமே ஏற்படும். அப்படிச் செய்தால் உங்களையும் உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான தலைவர்களையும் பிரிட்டன் நம்பவில்லையென்றும் நினைக்க நேரிடும்.

### வேண்டியதென்ன?

நமக்கு வேண்டியதென்ன? ஏது வேண்டுமென்று இந்தியா தெளிவாகச் சொல்லவேண்டும். தேச மக்கள் அரசாங்கம் நமக்கு வேண்டும். தேசிய அரசாங்கத்தான் நாம் விரும்புவது. இதைத்தான் தெளிவாக்க வேண்டும் (கரகோஷம்) இந்தியாவின் அடிமைச் சின்னம் நிரந்தரமாக நீங்கிவிட்டதென்று பிரிட்டிஷார் அறிவிக்கவேண்டும். நாம் சுதந்தர மக்களென்பதைத் தெளிவுபடுத்திவிடவேண்டும். வெறும் வார்த்தை மட்டும் போதாது. அதைச் செய்கையிலும் காட்டவேண்டும். எல்லா அதிகாரத்தையும் உடனே விட்டுக்கொடுக்கவேண்டும். அப்படிச் செய்துவிட்டால், இந்தியாவின் பாதுகாப்பு இந்தியாவின் பொறுப்பாகிவிடுகிறது. கிழவனுக்கு [illegible] போதிய சௌகரியமுமிருந்தால "குடும்பச் சொத்தைப் பிரித்துத் தரமாட்டேன் நானே தான் நிர்வகிப்பேன்" என்று குழந்தைகளோடு சண்டைபோடலாம். ஆனால் கிழவனை எல்லோரும் நாலாபக்கங்களிலும் [illegible] மலேயாவைப்பற்றியும் பர்மாவைப்பற்றியும் பார்லிமெண்டில் கேள்வி கேட்டால் எதிர்த்து நிற்பது கஷ்டம்.

உண்மை நிலைமையைக் கவனிக்க வேண்டும். அவர்கள் ஸ்தாபித்திருக்கும் இந்தப் பெரிய ஏகாதிபத்தியத்துக்கு நெருக்கடி நேர்ந்திருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை விடப் பெரிதான அவர்கள கௌரவத்துக்கு ஆபத்து நேர்ந்திருக்கிறது. ஆகையால பிரிட்டன் புத்திசாலித்தனமான காரியத்தைச் செய்யவேண்டும். பழைய பாடத்தையே திருப்பிப் படிக்கக் கூடாது. மனோபாவம் மாறினால் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் பிரிட்டனும் ஒன்றுகூடிப் பிற்காலத்தைப்பற்றி ஆலோசிக்கலாம். 'பாதுகாப்புடங்களைச் சேர்த்து; உங்கள் கௌரவத்தை நீங்கள் காப்பாற்றிக்கொள்ளுங்கள்' என்று அவர்கள் சொல்லிவிட்டால் நீங்கள் சிரிக்க முடியாது.

### பழைய தவறு

நீங்கள் எனக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும். எவ்வளவுபேர் இராணுவத்திலும் கடற்படையிலும் சிவில் பாதுகாப்பிலும் பங்கெடுத்துக்கொள்ள முன்வருவீர்கள். எவ்வளவுபேர் உங்கள் சொந்த வீடுகளை அழிப்பீர்கள். எவ்வளவுபேர் உயிர்துறக்கத் தயார்? இந்தக் கேள்விகளுக்கு நீங்கள் பதில்சொல்ல வேண்டியிருக்கும். அந்த நிலைமை ஏற்படுமாறு கடவுள் அருள் புரியட்டும். அந்த நிலைமை ஏற்படும்போது நாம் எப்படி நடந்துகொள்வோமென்பதிலிருக்கிறது நமது கௌரவமும் அவமானமும். நாம் புத்திசாலித்தனமாகவும் தைரியமாகவும் நடந்துகொண்டால் உலகத்துக்கு க்ஷேமமுண்டு. நாம் சரியாக நடந்துகொள்ளாவிட்டால், நாம் அழிந்துபோவதால் உலகத்துக்கு யாதொரு கஷ்டமுமில்லை. ஆகையால் தான் இப் பிரச்னைகளைப்பற்றித் தீரயோசிக்குமாறு காங்கிரஸ்காரருக்கு நான் சொல்லிவருகிறேன். "இந்தியாவை ஆளும் பொறுப்பைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தாமே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் பாதுகாப்பும் அவர்கள் பொறுப்புதான். நாம் கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்போமே" என்று சிலர் பேசுவது என் காதுகளில் விழுகிறது. இது ஆண்மைத்தனமா? கௌரவமான பேச்சா? பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நாட்டுக்குள் கால் வைத்தபோது நமது முன்னோர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்துகொண்டிருந்தால் இன்று நாம் சுதந்திர மக்களாயிருப்போம். அந்தத் தவறை மீண்டும் நாம் செய்யவேண்டுமா? இம்மாதிரி வாதங்களை நாம் கிளப்பவே கூடாது. இத்தேசத்தின் பாதுகாப்பு நம்மைத்தான் சேர்ந்தது.

"அப்படியானால், நீங்கள் ஏன் ஒத்துழைக்கவில்லை" என்று அறியாமை மிகுந்த சிவில் சர்வீஸ்காரர்கள் கேட்பார்கள். இந்தக் கேள்வி கேட்பதற்கு யாருக்காகத்தானிருக்கும். ஆனால், நான் உங்களைப் பல [illegible] வேலைக்குத் தூண்ட முடியுமா? "நமது பிரச்னைகளைப் பிறகு தீர்த்துக்கொள்வோம்; தியாகம் செய்யத் தயாராகுங்கள்" என்று நான சொன்னால், நீங்கள் கேட்பீர்களா? (மாட்டோம் என்று பலமான கூச்சல்) உண்மையாகச் [illegible]

## தேகவியோகம்

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தமிழ்[illegible] யம் தமிழ்ச்சா[illegible]ன பவத்தின் வளர்ச்சிக்காகப் பெருந்தொண்டாற்றியவரும் ஆங்கிலம், தமிழ், சங்கீதம், ஆயகலைகளிற் பெரும்புலமை வாய்ந்தவரும் ஆசாரசீலருமாகிய பண்டிதர் ஸ்ரீ கா. சின்னத்தம்பி தலைமை ஆசிரியர் (தலவத்துறை அரசினர் பாடசாலை கண்டி.) அவர்கள் விஷு வருஷம் தை மாதம் [illegible] திகதி (20.1.42) மங்கலவாரம் முற்பகல் பத்து மணியளவில் தமது முப்பத்துநாலாம் வயதில் இறைவன் பாதமெய்தினர். அவர் முஸ்லீம் சமூகத்திற்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் ஆற்றியதொண்டு உலகமுள்ள அளவும் எவ்வாறும் போற்றற்பாலது.

அவரைப்பிரிந்து துன்புறும் அவரது மனைவியும் தலவத்துறை அரசினர் பெண்பாடசாலைத் தலைமை ஆசிரியருமான ஸ்ரீமதி இரத்தினம் அவர்கட்கும் அவரது புத்திரர்கட்கும் எமது அநுதாபத்தைத் தெரிவித்து ஆறுதல் கூறுகின்றோம்.

—கடித

[illegible]ஸ்திதிக்காக நீங்கள் எல்லாத்தையும் தியாகம் செய்ய முன்வருவீர்களா? ("மாட்டோம்") நமது சுதந்திரத்துக்காகத் தியாகம் செய்ய வாருங்கள் என்றழைத்தால்...... ("தியாகம் செய்வோம்") என்ற கூச்சல்.

### 150 வருஷக் கொள்கை

பிரிட்டனின் 150 வருஷக் கொள்கையின் காரணமாக இத்தேச மக்களுக்கு அவர்களிடம் பெருத்த அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ் மந்திரிகள் ராஜினாமாச் செய்தபிறகு "உங்கள் ஆட்சியால் உங்களிடம் சிறுபான்மையினருக்கு அவநம்பிக்கை அதிகரித்துவிட்டது" என்று அவர்கள் சொன்னார்களல்லவா "நீங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் இது உண்மை" என்று திட்டமாக இன்னும் சொல்லுகிறார்கள். அது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை இந்திய மக்களுக்குப் பிரிட்டனில் அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறதென்பது. அத்தகைய ஜனங்களுக்கு நாம் உயிரூட்ட வேண்டும்-ஏன் மரணமூட்ட வேண்டும் என்றுகூடச் சொல்லலாம். மரணமடையத் தயாராயிருங்கள் என்று அவர்களுக்குச் சொல்லவேண்டும். ஏதாவது புதிய உசிதமான பலனைக் காட்டாமல் இதை எப்படிச் சொல்லுவது?

பிரிட்டிஷ் அரசாங்கம் சரியாக நடந்துகொண்டால், தேசத்தில் புத்திசாலிகளாகவும் பெரியோர்களாயுமிருப்பவர்களைக்கூட நமது வழிக்குக் கொண்டுவரலாம். மத்திய அரசாங்கத்தில் எல்லா அதிகாரமும் என்னிடமிருக்கிறதென்று சொன்னால் மட்டும் போதாது. அத்தகைய உறுதிமொழியுடைய பத்திரத்தைக் கொண்டுவாருங்கள் என்று தலைவர்கள் கேட்பார்கள். அந்தத் தஸ்தாவேஜு கிடைத்தால் நாம் அதைப் பண்டித நேரு மௌலானா ஆஸாத், ஸர்தார் படேல் இவர்களிடம் காட்டலாம். ஸர்தார்படேல் தஸ்தாவேஜைக் கிழித்து அதற்குள் ஏதாவது தில்லு முல்லு இருக்கிறதா என்றுகூடப் பார்ப்பார். பண்டித நேரு என்னைவிட ஆங்கிலபாஷையை நன்றாக அறிந்தவர். பிரிட்டிஷ் ஜனங்களுடன் வசித்தவர். அவருக்கே அவர்களிடத்தில் நம்பிக்கையில்லை. ஆகவே, நான் மேற்கொள்ளும் வேலை லேசானதல்லவென்பதை அறிவேன். பிரிட்டன் சரியான காரியத்தைச் செய்தால் இவர்களை நான் வழிக்குக் கொண்டுவந்துவிடுவேன். இவர்கள் கண்ணியமான மனிதர்கள். கண்ணியமானவர்களை நம்பக்கூடியவர்கள். ஆகவே, பிரிட்டன் கண்ணியமானதைச் செய்தால் இவர்களைத் திருப்பலாம். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் நல்லதும் பொல்லாததுமிருக்கிறதென்பதை நீங்கள் அறிவீர்கள். "பொல்லாதவனை ஒட்டிவிடு" என்று நமது வேதாந்தம் சொல்லுகிறது. அதைத்தான் நான் பிரிட்டனுக்குச் சொல்லுகிறேன்.

[illegible] மற்றொருவகைப் பேச்சு என் காதில் விழுகிறது. "இந்தக் கடைசிச் சமயத்தில் நாம் அதிகாரத்தை எடுத்துக்கொண்டு என்ன செய்யமுடியும்?" என்று சிலர் கேட்கிறார்கள். இந்தப்பேச்சினாலும் உபயோகமில்லை. அதிகாரம் கடைசிச் சமயத்தில் கிடைக்கிறதென்ற காரணத்தால பிறர் நம்மைச் சொல்லும்படி விட்டுவிடுவதா? பொறுப்பு கிடைத்தால, அதை ஏற்றுக் கடமையைச் செலுத்த எப்பொழுதும்தயாராயிருக்கவேண்டும்,

கூட்டத்திலொருவர்:- பொறுப்பு கிடைக்காவிட்டாலோ?

### பிரிட்டன் இசையாவிட்டால்

ராஜாஜீ:- அதைத்தான் சொல்ல வருகிறேன். இந்தச் சோதனையில் பிரிட்டன் தேறவிட்டால் என்ன செய்வதென்பதைக் கவனிப்போம்.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## நீர்கொழும்புப் பட்டினசபை [redacted]தலைவர்

### தலைவரின் விசேஷ வாக்கால் தெரிவு செய்யப் பட்டார்

நீர்கொழும்பு, ஜன. 27— நீர்கொழும்புப் பட்டினசபைத் தலைவரின் விசேஷ வாக்கால் திரு. எம். பி. லாரி மாத்தேஸ் பட்டின சபையின் உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மிஸ்டர். எம். ஜோசேப்பின் பெயரை உபதலைவர் பதவிக்கு மிஸ்டர். டி. பி. வி. சூரன் பிரேரித்தார். மிஸ்டர். எஸ். சே. விஜயரத்னம் பிரேரணையை ஆமோதித்தார். மிஸ்டர். எம். பி. லாரிமாத்தேஸின் பெயரை உபதலைவர் பதவிக்கு மிஸ்டர். ஏ. என். டி. ஏ. அபயசிங்கா பிரேரித்தார். மிஸ்டர். எம். பி. ஜி. பெர்னுண்டோ பிரேரணையை ஆமோதித்தார்.

முதற்பிரேரணையைச் சாதகமாக ஆறுவாக்குக்களும் இரண்டாவது பிரேரணைக்குச் சாதகமாக ஆறுவாக்குகளும் கிடைத்தமையால் தலைவர் தமது விசேஷ வாக்கை உபயோகித்து மிஸ்டர். மாத்தேஸ் உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டாரென்று அறிவித்தார்.

## அரிசி ஏற்றிச் செல்லும் புகைரதங்கள்

1-ம் பக்கத் தொடர்ச்சி

பழைய விலைக்கு அரிசி விற்கலாமென்று அறிவிக்கப்பட்டது. அடுத்த இத்தினங்களில் நகரசபையின் கடைகளும் பழைய விலைக்கு அரிசி விற்பனை செய்யும்.

குறித்த மகாராட்டில் அரிசிக்கட்டுப்பாடு கடைக்கு வரும்பொழுது நகரசபை அரிசி விநியோகர்களும் அதுமதி பெற்ற விற்பனை ஸ்தலமாக்கப்படுவதுபற்றி ஆலோசனை செய்யப்பட்டது.

நகரசபையும் அனுமதிபெற்ற அரிசி விற்பனையாளராக இருந்து அரிசி விநியோகத்தை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அரிசி வாங்குவோர் நகரசபை விநியோகர்களுக்கு மனுச்செய்து கொண்டால் அவை ஏற்றுக்கொள்ளப்படுமென்றும் மிஸ்டர். ஓ. ரிகான் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

## சங்கத் தமிழ்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

கணமே முதலிற் பெரும் பொருளாகிய கடலைக் கூறினன். கடல் கரிதாயினும் அலை நுரைகளால் வெண்ணிறமாகத் தோன்றுதல் இயல்பு இதனாலேயே "வெண்டலைப்புணரி" எனக் கூறுவர். மிக அகன்ற கடற்காட்சியின் பின் கடற்கரைச் சோலை காணப்பட்டது. கடற்பாப்பினும் இது சிறிதாதலின் இரண்டாங்காட்சி ஆயிற்று மூன்றுவது அச்சோலைக்கண்ணுள்ள புன்னைமரங்கள் சுட்டப்பட்டன. பொதுக்காட்சி சோலையாகவும் சிறப்புக்காட்சி புன்னைமரங்களாகவும் இவை தம் பொருத்தமே

திருச்சி, 7-12-41

## குறைந்த விலை

கொழும்பிலே கோதுமைமா சீனி வெண்ணுமினையன் கட்டுப்பாட்டு விலையைக் காட்டிலும் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றனவாம்; இப்படி மலிவாக விற்கப்படுவதற்குக் காரணம் வெற்றூர்களுக்கென அனுப்பப்பட்ட மாவும் சீனியும் அந்தவூர்களில் இந்தச் சமயத்தில் இறக்குதல் இயலாதாக, கொழும்பிலே கொண்டு வந்து இறக்கப்பட்டுள்ளனவாம்.


### ஆறுமுகநாவலர் பதிப்புப் புத்தகங்கள்

ஆறுமுகநாவலரவர்கள் பதிப்பு நூல்களை இலங்கையில் விற்பனை செய்வதற்குவே, கந்தசாமி என்பவரைச் "சோல் ஏஜென்ட்" ஆக நியமித்திருக்கிறோம். மேற்குறித்த வியாபார ஸ்தலம் இந்துசாதன ஆபிசிற்கு முன்னுள்ளது. இன்று தொடங்கி நாவலரவர்கள் பதிப்பு நூல்களுக்குரிய ஓடர்களை இந்தியாவுக்கனுப்பாது இத்தாபனமும் விலாசமுள்ள புத்தகசாலைக்கே அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேம்.

விலாசம்:-

V. Kandasamy
Jaffna Tamil Book Depot
VANNARPONNAI.

Q 134 17-11-41 16. 2. 42


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(+ இசைத்தட்டு)

(396 மீ)

### செவ்வாய் பெப்ரவரி 3

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 ஆர். வி. சுப்ரமண்யம் வீணை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 படப்பாட்டுகள் + 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 இந்துஸ்தானி இசை + 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 டி. பி. ராமகிருஷ்ணன் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 ஆர். வி. சுப்ரமண்யம் வீணை 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமநிகழ்ச்சிகள் 6-30 வானொலி வாத்திய கோஷ்டி 7-00 ஓம்கார் நாத் தாகூர் + 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 மதராஸிலுள்ளபடி பாலக்காடு ராமபாகவதர் பாட்டு 9-15 திருப்பாம்பரம் ஸ்வாமிநாத பிள்ளை புல்லாங்குழல் + 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை + 9.55 நாஜி பிரசாரம் பி. பி. ஸி. அஞ்சல் 10.00 ஒலிபரப்பு முடிவு.

### புதன் பெப்ரவரி 4

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 டி. ஏ. சுந்தராம்பாள் பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 பொறுக்கு இசைகள் + 9.00 ஒலிபரப்பு முடிவு.

1-00 படப்பாட்டுகள் + 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 திருப்புனித்துறை ஜி. விசுவநாத பாகவதர் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 கே. எஸ். நாராயணமூர்த்தி புல்லாங்குழல் 5-45 இசைப் பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராம நிகழ்ச்சிகள் 6-30 திருப்புனித்துறை ஜி. விசுவநாத பாகவதர் பாட்டு 7-15 நடைமுதல் நிகழ்ச்சி 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 சர்வகலாசாலைகளுக்கு ஆங்கிலம் 8-15 கே. எஸ். நாராயணமூர்த்தி புல்லாங்குழல் 8-45 டி. ஏ. சுந்தராம்பாள் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை + 9-55 நாஜி பிரசாரம் பி. பி. ஸி. அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

### வியாழன் பெப்ரவரி 5

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 ஆர். பத்மநாப ஐயர் புல்லாங்குழல் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 டாக்கி இசைகள் + 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 பிற்பகல் இசைகள் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஆர். பத்மநாப ஐயர் புல்லாங்குழல் 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5.00 பி. மலையப்ப சாஸ்திரி பாட்டு 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராம நிகழ்ச்சிகள் 6-30 பி. மலையப்ப சாஸ்திரி பாட்டு 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 சிறுவர் எம். மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை பாட்டு திருவாளப்புத்தூர் கிருஷ்ணமூர்த்தி வயலின் தஞ்சாவூர் ஆச்சாரியார் மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை + 9-55 நாஜி பிரசாரம் பி. பி. ஸி. அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு


வாதம், சலரோகம், குன்மம், முதலிய

எந்த

# வியாதியானாலும்

உத்திரவாதத்துடன் குணப்படுத்தப்படும்.

சுகாதார மாஜி மந்திரி கனம்
Dr. T. S. S. ராஜன்
ஸ்ரீ. S. சத்தியமூர்த்தி M. L. A.
Dr. C. சபாபதி, M. B. C. M. M. R. C. S. L. R. C. P.

முதலிய பலரால் புகழ்ந்து நற்சாட்சிப்பத்திரம் அளிக்கப்பட்டன. நேரில் அல்லது தபால்மூலமாய்ச் சிகிச்சை பெறவும்.

Dr. K. S. Paripurnananda
Regd. MEDICAL Practitioner
R. K. S. Vaidyasala
Palaly Rd. Kandarmadam
JAFFNA

Q 129 6-11-41—5-2-42


## ஜனங்களின் யுத்த காலப் பொறுப்பு

3-ம் பக்கத் தொடர்ச்சி

நெருக்கடியான சமயங்களில் எந்த அரசாங்கமும் தன் அதிகாரங்களை அதிகரித்துக்கொள்ளும். இந்தியா அரசாங்கமோ வெளிநாட்டாரான ஒரு சிறு கோஷ்டியார். அவர்கள் தேச முழுவதிலும் தங்களைப் பரப்பிக்கொள்ள முடியாது. ஆகவே இந்திய அரசாங்கத்தின் சக்தி நகரங்களில் தான் அதிகமாகக் காணப்படும். கிராமங்களுக்கு எட்டாது. ஆகவே, இத்தகைய ஒரு பெரிய தேசத்தில் அரசாங்கத்தின் அனுவல்களுக்கு உதவியாக இருக்க ஜனங்கள் தாங்களாகவே ஒரு அரசாங்கத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். நான் சொல்லும் ஏற்பாடு இப்பொழுதுள்ள அரசாங்கத்தோடு போட்டி போடுவதற்காக வல்ல. அரசாங்கம் உதவி எட்டாத இடங்களில் ஜனப் பாதுகாப்புக்காகச் செய்யவேண்டிய அலுவல்களைப்பற்றிக் குறிப்பிடுகிறேன். ஒரு கிராமத்தில் கொள்ளை நடக்கிறது. வீடு தீப்பிடிக்கிறது. இவற்றைச் சமாளிக்கப் பொலிஸ் உதவியை எதிர்பார்க்க முடியாது. ஜனங்கள் சமாளித்துக்கொள்ளவேண்டும். பழைய காலங்களில் ஜனங்கள் இம்மாதிரித்தான் தங்களைப் பாதுகாத்துக்கொண்டார்கள்.

ஸ்ரீமான். ஸி. இராஜகோபாலாச்சாரியார் மேலும் பேசுகையில், கிராமங்களில் பொருள்களை விளைவித்துச் சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். யுத்தத்தால் பொருள் கட்டுப்பாடு அதிகமாகும் காலத்தில் நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றுவது எவ்வளவு உபயோகமானது என்பதையும் விளக்கினர்.

அவர் முடிவாகப் பேசுகையில் ஜனங்களிடை அச்சம் அனுவசியமென்று கூறினர். அவர் சொன்னதாவது:-

### பயம் வேண்டாம்

ஜப்பான் இங்கு உடனே வந்துவிட முடியாது. அமெரிக்கர்கள் சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தவிர, ஜப்பான் தான்பிடித்த இடங்களைப் பாதுகாக்கவேண்டியிருக்கிறது. சாம்ராஜ்யத்தை அதிகமாக விஸ்தரித்துவிட்டால் பாதுகாப்பு மிகக் கஷ்டமென்பதற்கு அவர்களுக்கு உதாரணமுமிருக்கிறது. ஆகவே நாம் பயத்தைக் கிளப்பவேண்டாம். இதனால் சமூகக் காரியங்கள் கிலகுலைந்துபோகும். நீங்கள் பாங்கியிலிருந்து பணத்தை வாங்கிக்கொள்ளுங்கள். அதை ரகசியமாகப் பக்கத்து வீட்டுக்காரரிடம் சொல்லி அவரையும் அக்காரியத்துக்கு ஏவ வேண்டாம். இப்படி எல்லாரும் முற்றுகையிட்டால் எந்தப் பாங்கியும் நிர்வகிக்க முடியாது. பணமும் பூரசவாகக் கிடைக்காது. பாங்கி இன்ஸால்வெண்டில்தான் போய்நிற்கும்.

### சர்ச்சிலுக்குத் தீர்க்க தரிசனமில்லை

பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்குத் தமது வேலை இன்னதென்று தெரியவில்லை. அவர் பெரிய போர்வீரர். ஆனால் ஒரு பெரிய ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய தீர்க்கதரிசனம் அவருக்கில்லை. ஒரு வேளை அமெரிக்கா அவருக்கு விஷயத்தை எடுத்துச் சொல்லியிருக்கக் கூடும்' இந்த மனிதனுக்கு ஞானோதயமாகுமென்று எதிர்பார்ப்போம். அது சம்பவித்துவிட்டால் நீங்கள் என்ன செய்யவேண்டுமென்பதையும் சொல்லிவிட்டேன் (கரகோஷம்)

ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தி முடிவில் பேசுகையில் யுத்தப் பிரசாரக் கமிட்டிகளிடை காஜாஜியின் பிரசங்கம் ஜனங்கள் பயத்தை நிவர்த்திக்கவல்லதென்றும ஆலோசகர்களை வாபஸ் முடிக்கொண்டிருக்கும்படி செய்யமேத கவர்னர் இக்நாட்டுக்கும் பிரிட்டனுக்கும் செய்யக்கூடிய சேவையாகுமென்றும் கூறினர்.


### விசேஷ விளம்பரம்

இந்தியா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு, முதலிய தேசங்களின் பிரதான ரேகைசாஸ்திர நூல்களின் பிரமாணங்களைக் கொண்டு உங்கள் கைரேகையிலிருந்து எல்லா விதமான பலன்களையும் சொல்லக் கூடும்.

ஸ்புடம் தசவர்க்கம் முதலிய கணித வகைகளும் மகாதெசை புத்தி பலனும் அடங்கிய ஜாதகம் ரூபா 5 விஷேஷயங்களுடன் கோசரபலன் நாடிசக்கரபலன், பாவபலன், முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—

சோதிடர், நா. சின்னத்துரை
கைதடி வடக்கு, கைதடி.

Y 67 20-7.41—19.7.42





மெலிந்து சோர்வுற்று பலமிழந்து ஊக்கமற்று இருக்கும சகலருக்கும் ஓர் விசேஷச் செய்தி

ஜீவாதார உலோக சத்துக்களடங்கிய இந்தச்சிறந்த சாதனம் உங்களுக்குப்புதிய ஆரோக்கியமும் ஊக்கமும் பலமும் அளிக்கும்

பழனி சி. எம். சாமி அசல் தங்கபஸ்பத்தை இன்று முதலே சாப்பிட்டு வாருங்கள். உஷ்ணம், மேகம், கடுப்பு, மூலம், நீரிழிவு, வாதம், தொய்வு, க்ஷயம், குன்மம் இவைபோன்ற ஏனைய எல்லா நோய்களும் நீங்கிவிடும். சுண்டிப்பாகப் பலனடைவீர்கள். தேகம் பூராவும் புது ரத்தம் பாயும். பசி ருசியுண்டாகும். சாம்பல் வலுவடையும், கண்கள் பிரகாசமடையும். நீங்கள் வாலிப பலமும் தேக இடசாத்திரமும் அடைவீர்கள்.

24 நாள் பஸ்பம் விலை ரூபா 10

தலைமை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S I
கிளை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y221 31-3.41—30.3.42



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134.36700**
**100** ரூபா விகிதமான **8000** பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் 9௫ விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து வைப்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y164 A. 21-11-41—20-11-42 (இ)



குறைந்தவிலை! குறைந்தவிலை!!

தற்போது

இலங்கை இந்தியா முழுவதும் பெயர்பெற்ற

* **பவுண் மார்க் ஓடுகள்** *

திறமான "பவுண்மார்க்" ஓடுகள் தற்சமையம் யாழ்ப்பாணம் ரேகில் வரவிருப்பதால் ஏறக்குறைய ஒருவாரம்வரையில் மேற்படி ரேகில்

சகாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்

தேவையானவர்கள் முந்தியே ஆடர் அனுப்ப வேண்டியது

சி. வீரகத்திப்பிள்ளை அன்ஸ்சன்ஸ்

[Phone No 93] யாழ்ப்பாணம்

Y 164 –



புதிய [1942] பாடத்திட்டத்திற்கு இயைந்த

# தமிழ் இலக்கிய வாசகங்கள்

5-ம் 6-ம் 7-ம் வகுப்புகட்குரியவை

| | | | |
|---|---|---|---|
| 1 | இலக்கியவாசகம் முதற்பாகம் | சதம் | 15 |
| 2 | ,, இரண்டாம்பாகம் | சதம் | 20 |
| 3 | ,, மூன்றும் பாகம் | சதம் | 25 |

செந்தமிழ்க் கருவூலம்

திரு. வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட உரையுடன் கூடியது. J. S. C. பரீட்சைக்கு ஆதாரமாக ஆறும் ஏழாம் தரங்களில் மாணவர்க்குச் செய்யுளிலக்கிய அறிவை வளர்த்தற்கேற்ற பாடபுத்தகமாகக் கொள்ளத்தக்கது.

மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாச யந்திரசாலை.



### புத்தக விளம்பரம்

எஸ். எஸ். ஸி. பாடப் புத்தகங்கள்

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1 | அறிவுரை மாலை | 75 |
| 2 | அருச்சுனன் தீர்த்தயாத்திரைச்சருக்கம் (தமிழுரை ஆங்கில மொழிபெயர்ப்புடன்) | 75 |
| 3 | திருக்குறள் அதி. 1—10 கையடைப்படலம் (உரை) சங்ககாலக் கட்டுரைக் குறிப்பு | 75 |

| | | |
|---|---|---|
| 1 | தமிழர் சரித்திரம் | 2 00 |
| 2 | தமிழகம் | 2 25 |
| 3 | புறப்பொருள் வசனம் | 1 00 |
| 4 | பரிபாடல் வசனம் | 1 00 |

எல்லாப்பெரிய புத்தகவியாபாரிகளிடமும் கிடைக்கும்

Q 175—27-1-42—26-4 42



### பிரிட்டனிலிருந்து சாமான்கள்!

புதிதாகக் கப்பலில் வருகின்றன...

மூக்குக் கண்ணுடி பிறேம்கள், கண்ணுடிகள், பல்கட்டுவதற்குத் தேவையான சாமான்கள்

செயற்கைப்பற்கள்

பிளாஸ்றர் ஒவ் பாரிஸ் ரூத்தல் ஒன்று ரூ. 1-50

"டூரெக்ஸ்" கிளினிக்கல் தேமோமீற்றர்கள் (சரியானவை நீடித்தகாலம் உபயோகிக்கத் தகுந்தவை என்பனவற்றிற்கு உத்தரவாதம்)

ஒன்று ரூ. 2-50

பத்திராஜு & சன்,
3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

Q 115 23-1-42—22-4-42



# N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo.

Telephone No. 30.

(Y 20— 1-4-41—31-3-42) தி



## வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்



வடமாகாண

# ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

1933-ம் ஆண்டு தொடக்கப் பெற்றது

அரசினரால் பதிவு செய்யப்பட்டது

அங்கத்தவர்கட்டணப்பணம் மாத்திரம் 45000 ரூபாவிற்குமேலிருக்கிறது

30 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு ஆசிரியரும் அங்கத்தினராய்ச் சேரலாம்.

மாதக்கட்டண விகிதம்:-

1-ம் வகுப்பு ரூ. 4-00 2-ம் வகுப்பு ரூ. 2-00
3-ம் வகுப்பு ரூ. 1-00

தேவையான விபரம் எம்மிடம் அறிந்து கொள்ளலாம்

ச. பொ. இராசையா
காரியதரிசி,
வடமாகாண ஆசிரியர்சகாயநிதிச்சங்கம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
வண்ணார்பண்ணை

H 145 1-12-41—31-5-42



# தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.

"புரோப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்

Y 19. 4.3.41—3.3.42



### விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10.00 அரைக்கலம் ரூபா 5.00
கால்கலம் ரூபா 4.00 ஒரு அங்குலம் ரூபா 1.00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

காலம் குறித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்தும் மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். கடன்பணமாக அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

### பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசபை எல்லைக்குள் தபால் ரூபா 5-00 இல்லையேல் தபாலும் 9-00
இலங்கை இந்தியா 8-00 இல்லையேல் தபாலும் 12-00
தொலைநாட்டுப் பகுதி 9-00 இல்லையேல் தபாலும் 13-00

தனிப்பிரதி சதம் 5

முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva PrakasaPress Vannarponnai, Jaffna, on Monday February 2nd 1942.